ரிஜிஸ்டர் நெ. 2041　　தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரு. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரு. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7　　ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஆவணி௴ 28௳ (13—9—1931)　　மலர் 20

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

காமரூபிலேகியம் தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ, 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், கீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

கைவல்யம் அல்லது ஞ லை க் ய ா ன ம் .

விலை அணு 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி அயோத்யாகாண்டம்.

விலை அணு 0—8—0.

கிடைக்குமிடம்—குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவறாதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டு௴த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., (வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0

விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—
திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
செவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

இனம்! இனம்!! இனம்!!!
முந்துங்கள்! 1000 முந்துங்கள்!!

மக்களால் வாசிக்கப்பட்ட

ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்களை

படித்து எளிதில் பேச, எழுத, வாசிக்க கற்றுக்கொள்ளுங்கள். (முதல்பதிப்பில் சொற்ப கோர்ஸ்கள் தான் கைவசம்)

தமிழ் வாசிக்க தெரிந்த யாவரும் 17 கோர்ஸ்களடங்கிய பாடங்களை தபால் மூலம் 30 நாட்களில் வாசித்துக் கொள்ளலாம். வியாபாரிகள், தொழிலாளிகள், ஆபீஸ் சிப்பந்திகள், கிராம உபாத்திமார்கள், பாடசாலை மாணவர்களுக்கு அதிக பிரயோஜமானது. ஏழை மக்களுக்கென்றே எழுதப்பட்டது. பீஸ் ரூ. 5—0—0 புதுவாழ்க்கை ஜீவரஹஸ்ய புஸ்தகங்கள் சொற்ப காலம்வரை இனம்.

அட்மிஷன் பாரம்

டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்
இன்ஸ்டிடியூட் ஆறுமுகநேரி S. I. R.

ஐயா,

இத்துடன் ரூ. 5. அனுப்புகிறேன். என்னை ஓர் மாணவராகச் சேர்த்து ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்கள் பூராவையும், இனம் புஸ்தகங்களோடு அனுப்பவும் எனக்கு அனுப்பப்படும் பாடங்களை பிரயாசைப்பட்டு வாசித்து வருவேனாகவும்.

தெளிவான விலாசம்..........................

கையெழுத்து

N. B. அயல்நாட்டு மக்கள் காலதாமதமாகாதபடி ரிஜிஸ்டர் மூலம் தொகை அனுப்பவும்.

சுயமரியாதைச் சமத்துவப் பாடல்கள்.

சுயமரியாதைக் கொள்கைகளை நன்கு விளக்கி அவைகளின் முன்னேற்றத்தினாலேயே சுயராஜியத்தையுமடைய முடியும் என்ற விவரத்தைப்பல பாடல்களாலும் வசனங்களாலும் விளக்குவகிறது. விலை அணா 0—2—6 ஒரு பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

குடிகாரர் மகாநாடு.

ஹாஸ்யமுறையில் மதுவிலக்கின் அவஸ்யத்தை வற்புறுத்துவதிது. விலை அணா $1\frac{1}{2}$ ஒரு பிரதி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஜே. எம். கிருஷ்ணமாச்சாரி.
சமத்துவப் பிரசுர நிலையம், தெற்குமாசிவீதி, மதுரை.

"சன்மார்க்கன்"
உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில்குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

சனாதன தருமமென்றால் பழைய தருமமென்பது பொருள்.

(கைவல்யம்)

நீங்கள் படித்தவர்கள். விஷயத்தின் ஆரம்பத்தைக் கேட்டமாத்திரத்திலேயே விஷயங்கள் பூராவும் தெரிந்துகொள்ளக்கூடியவர்கள். என்றாலும் எனது வியாசத்தைப்பூராவும் படித்து ஆலோசித்துப்பார்த்தீர்களானால் சமயத்தின் உண்மைகள் விளங்கிவிடும்.

தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் இந்திய சட்டசபை பிரதிநிதியான திரு கிருஷ்ணமாச்சாரியார் இந்தியா சபையில் சாரதா சட்டத்தைமாற்றுவதற்காக ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார். ஏன் கொண்டுவருகிறார்? அதிலுள்ள சாதகபாதகமென்ன? அதற்காக அவர் சொல்லும் காரணகாரியங்களெவை? அக்காரணங்கள் சனாதனதருமமென்பதின் முன்னோர் பழையவழிக்கு ஒத்ததுதானா? நமது தேசத்தின் ரக்ஷைக்குத் திடமான பிள்ளைகளை உண்டாக்கக்கூடியதுதானா? இளம்பெண்களின் துன்பத்தைத்தீர்க்கக்கூடியதுதானா? என்பவைகளை ஆலோசித்துப்பாருங்கள். இவைகளை ஆலோசித்துப்பார்த்தீர்களானால் சனாதனதருமமென்றும், சமயமென்றும், சாஸ்திரமென்றும், சொல்லுவதின் குணதோஷங்கள் விளங்கிவிடும்.

சனாதனதருமமென்றால் பழைய தருமம், பழைய வேதம், பழைய நடக்கை என்பதே பொருள்; பார்ப்பனருடைய சனாதனதருமத்திற்கு சாரதாச்சட்டம் விரோதமானதல்லவென்றும் இந்துவிவாகமானது பாரமார்த்திகத்துடன் கடவுள் சம்பந்தமாயும், சாஸ்திர சம்மதமாயும் சொல்லப்பட்ட பிரமாணங்கள், ரிஷிகளென்ற பிராமணர்களின் ஆசாரியமங்களுக்குப்பொருந்தினாலும் எல்லா போகபோக்கியங்களையும் விரும்பும் மற்ற பார்ப்பன ஆண்பெண்களுக்குப்பொருந்தாதென்றும், பொருந்தாததை சாஸ்திரசம்மதமென்றும், கடவுள் சம்மதமென்றும் அனுமானிக்கப்பட்டு உபயோகித்துவருகிற யுக்தி பொருத்தமற்றதென்றும், அனுபவத்தையும் நடவடிக்கைகளையும் அறிவாளிகளின் அபிப்பிராயத்தையும் சனாதனதருமக்கொள்கைகள் அத்தனையும், அவர்கள் கைவிட்ட நிலையையும், ஆதியில் ஆரியர்கள் ருதுமதி விவாகத்தை அனுசரித்து வந்த ஆரியக்கொள்கையின் வழக்கத்திலிருந்து மாற்றப்பட்டு அதிலிருந்து பழக்கத்துடன் நிலைத்துநின்றுவிட்டதையும், அதனால் உண்டாகும் கெடுதல்களையும் விபரமாகக்'குடிஅரசு' பத்திரிகையில் என்னால் முன் எழுதப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதையெல்லாம் எடுத்தெழுதினால்நீண்டுவிடும். ஆனதால் திரு. கிருஷ்ணமாச்சாரியாரும் பிராமண சபையும் இப்பொழுது சாரதா சட்டத்திற்குச்சொல்லும் காரணங்களான சனாதனதருமத்திற்குவிரோதம், ராஜாங்கம் மதத்தில் பிரவேசிக்கப்படாது என்கிற இரண்டுக்கும் சுருக்கிபதில் சொல்லுகிறேன்.

சாரதாசட்டம்வருவதற்கு முன்னமே பல அறிஞர்கள் சிறுவயது மணத்தைக்கண்டித்து வந்தார்கள். ருதுவான பிராமணப்பெண்களின் விவாகம் சாஸ்திரீயமானது என்பதைப்பற்றி வியாசமெழுதுகிறவர்களுக்கு பரிசுகொடுப்பதாக சென்னை இந்து சபையார் சொன்னார்கள். பலர் வியாசமெழுதினார்கள். அதில் 24வியாசங்களை எடுத்து கனம் பி. எஸ். சிவசாமி அய்யர் ராய்பகதூர், எம். ரெங்காச்சாரி, கனம் வி. கிருஷ்ணசாமிஅய்யர் இவர்கள் ஒரு சிறு சபையாகக்கூடி வியாசங்களைப்பரிசோதனைபண்ணி கர்நூல் வக்கீல் கனம் வரத ஐயங்கார் வியாசம் உயர்வானதென்று அவருக்கு 100 ரூபாய் பரிசும் கொடுக்கப்பட்டது. கனம் பி. எஸ். சிவசாமி அய்யர், வி. கிருஷ்ணசாமி அய்யர் இவர்கள் பெரிய வக்கீல்களாக விருந்து ராஜாங்கத்தில் பெரும்பதவிகளை வகித்தவர்கள். கனம் எம். ரெங்காச்சாரி அவர்கள் சென்னைமாகாணக்காலேஜ் சமஸ்கிருத பண்டிதர். இவர்களுக்கு முன்னால் பார்வையிடப்பட்ட வியாசங்களின் கருத்துக்களை மற்றவர்களும் எளிதில் தெரிந்துகொள்ளும்படியாக அந்த வியாசங்களை ஒரு புஸ்தகமாக எழுதி வெளியிடவேண்டுமென்று இந்து சபையார் அபிப்பிராயப்பட சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் நல்லபயிற்சியுடைய கனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் ஆங்கிலத்திலெழுதினார். அது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

காலம்சென்ற ஹைகோர்ட்ஜட்ஜு கனம் மணிஅய்யரின் தலைமையில் எம். ரெங்காச்சாரி கனம் சிவசாமி அய்யர், கனம் வி. கிருஷ்ணசாமி அய்யர் முதலியவர்களும் அப்பொழுது பிரபலமாக விருந்த வக்கீல்கள், சாஸ்திரிகள் முதலியவர்களும் டவுன் ஹாலில் ஒன்றுகூடி சாஸ்திரயுக்தமான ஆசாரசீர்திருத்த சபை கூடினார்கள். அதில் ருதுவானபிராமணப்பெண்களுக்கு விவாகம் ஏற்படுமானால் அதுகோர்ட்டுகளில் அயுக்தம் சாஸ்திரவிரோதமென்றாவது ஒருக்காலும் தீர்மானிக்கப்படமாட்டாது கன்னிகையின் விவாகம் பண்டைகாலத்தில் ருதுவான பெண்களுக்கு நடைபெற்றுவந்ததென்றும், நம் தேசத்தின் இந்து சாஸ்திரங்களை பட்சபாதமின்றி நடுநிலைமையான புத்தியுடன் வாசிப்பவர்களுக்குத்தெளிவாய்ப்புலப்படுமென்றும். சரியான வரன் கிடைக்கிறதில் ஏற்படும் கஷ்டம் சிரமங்களை உத்தேசித்து அதிகவயதுவரையிலும் விவாகம் இப்போது தாமதிக்கப்படுவதையும் உத்தேசித்து விவாக வயது 13க்கு மேலிருக்க வேண்டுமென்று தீர்மானமும் பண்ணினார்கள். இவைகள் 25 வருடங்களுக்குமுன் நடந்தவைகள்.

திவான் பகதூர் ரகுநாதராயர் அவர்கள் அநேக வருடங்களாக நம்முடைய தற்கால ஆசாரங்களின் கொடுமையைச் சாஸ்திரங்களின் மேல் சுமத்துதல் நியாயமன்று. இந்து சாஸ்திரங்களை எதார்த்தமாக அறிந்தால் ருதுவாகுமுன் கன்னிகைகளை விவாகம் செய்யக்கூடாதென்று நன்றாய்த்தெரியவருமென்று பலசமயம் சொல்லியிருக்கிறார். அதுபோலவே இந்து சாஸ்திரத்தைப்படித்து அதில் பண்டைக்காலத்தில் நடந்துவந்த வழக்கங்களையும் தெரிந்தவர்களான அறிவாளிகளும் விஷயத்தில் சிரத்தையுடையவர்களும் சொலலியும் பத்திரிகைகளுக்கு எழுதியும் வந்தார்கள். அதற்குபின் அவை கவனித்துக்கட்டுபாட்டில் நிற்காததையும் அதனால் விவாகக்கஷ்டமும் பிள்ளைப்பேற்றின் துன்பமும் சிறுதாய்மார்களும் அவர்கள் எலிக்குஞ்சுப்பிள்ளைகளும் நோய்வாய்ப்படும் பரிதாபமும் கண்டு ராஜாங்க சட்டத்தால் ஜனங்களை கட்டுப்படுத்தினாலே சமூகம் சீரடையுமென்று தெரிந்து பல அறிஞர்கள் ஆலோசனையின்மேல் இந்தியாசட்டசபையில் சட்டமாக்கவும் கொண்டுவந்தார்கள். அப்பொழுது ஜனசமூகத்தின் அபிப்பிராயமும் கேள்க்கப்பட்டது. அந்த சட்டத்தைப்பற்றி அப்பொழுதிருந்த சட்டமெம்பர்கள் அதன் குண தோஷங்களை செவ்வையாக வாதித்தார்கள். சிலர் பெண்களுக்கு 18வயதாக வேண்டுமென்றார்கள். சிலர் ஆக்ஷேபித்தார்கள். சிலர் சீர்திருத்தம் கொண்டு வந்தார்கள். சிலர் அப்படியும் இப்படியும் பேசினார்கள். இவைகளுக்கெல்லாம் நியாயமான பதிலும் சொல்லப்பட்டு 14 வயதிற்குமேற்பட்டே விவாகம் செய்யவேண்டுமென்று சட்டமும் செய்யப்பட்டது. இப்பொழுது அதை மாற்றுவதற்காக திருத்தம் கொண்டுவந்திருக்கும் திரு கிருஷ்ணமாச்சாரியார் முன் சொன்னவர்களை எல்லாம்விட சமய சாஸ்திரப்படிப்பிலோ ஆங்கிலசட்டஞான அரசாட்சி நிர்வாகத்திலோ சமூகநன்மையின் கவனிப்பிலோ எந்தவிதத்திலும் ஒரு சிறிதும் மேற்பட்டவராகவோ சமமுடையவராகவோ சொல்லமுடியாது. அப்படியிருந்தும் அவர்களைவிட 14க்கு மேல் நடக்கும் விவாகத்தினால் உண்டான கெடுதலைப்பற்றி தெரிந்ததென்ன? வாலிப விவாகமும் அதனால் இளம்பெண்கள் படும் குடும்ப கஷ்டமும் ஒன்றுக்கும் உதவாததேகமெலிவு, அளவுகுறைவு, பலயீனம், நோய், கபடசுபாவம் முதலியவைகளைக்கண்டும்இப்பொழுது பார்ப்பனப் பெண்களுக்கு பலர் அதிக வயதாகியே செய்யப்படும் விவாகமும் ருதுவானதை மறைத்து வைப்பதும் தெரிந்தும் கனம் கிருஷ்ணமாச்சாரியும் அவர் வைதீக கோஷ்டிகளும் இப்பொழுது விவாகத்திற்கு ஒரு சட்டமிருப்பதுபோலவே பின்னும் சமூகசீர்திருத்தங்களுக்கு சட்டம் வந்துவிட்டால் பார்ப்பனர்களின் வைதீகப்பிழைப்பின் ஆதிக்கம் தற்பெருமை தன்லாபம் போய்விடுமே என்கிற ஒரேகாரணத்தை மனதில்கொண்டு சாரதா சட்டத்திற்கு மாற்றம் கொண்டுவந்திருப்பது பார்ப்பனர்களின் கபடமல்லவா? சனாதனதருமமென்கிற அவர்கள் பழைய ஆசாரங்களை கடந்து எதுவும் செய்து கொள்ளுவார்கள். ஆனால் சனாதனதருமமென்கிற பழைய ஆசாரங்கள் புஸ்தகங்களிலுள்ளதுபோலவும் அந்த ஆசாரங்களை அனுஷ்டித்து பிராமணர்களாகவிருந்தவர்கள் போலவும் தங்களையெல்லாம் நினைக்கும்படியாக எல்லாப்பார்ப்பனர்களும் நினைக்கிறார்கள். அந்த நினைவானது அவர்களைப்பின்பற்றும் மற்றவர்கட்கும் துன்பத்தைக் கொடுக்கின்றது. அந்தத்துன்பம் நாட்டை இகழ்ச்சிக்குறியதாக்கி மகாத்மா காந்தி அவர்கள் போயிருக்கும் காரியத்திற்கு லாயக்கில்லாதவர்கள் என்பதையும் அங்கே காட்டிவிடுகிறது.

இந்து பாலிய விவாகமானது பாரமார்த்திகத்துடன் கடவுள் சம்மதமாயும் சாஸ்திர சம்மதமாயும் அனுமானிக்கப்பட்டு உபயோகித்து வருகிற யுக்தி பொருத்தமற்றது. அனுபோகத்தையும் ஆராய்ச்சி பண்ணும் அறிவாளிகளின் அபிப்பிராயத்தையும் சனாதன தருமத்தின் பழமைக்கும் விலகியிருக்கிறதென்பதற்கு பழைய வேத ரிஷிகள், ஸ்மிருதி ரிஷிகள், புராண ரிஷிகள், இவற்றின் உபசாஸ்திர ரிஷிகள், அவற்றில் காணப்படும் கதைகளின் ரிஷிகள் இவர்கள் சரித்திரங்களே பிரத்தியக்ஷப் பிரமாணமாகவிருக்கின்றன.

அதுவுமல்லாமல் வியாசர், பராசர், வசிஷ்டாராதிபர்கள் போக சுமார்த்த மதத்திற்கு பிரபல குருவான சங்கராச்சாரியார் விதவையின் பிள்ளையென்பதாக அவர் சரித்திரம் சொல்லும். இப்பொழுதும் அவருடைய ஜாதியான பிராமணர்கள் ருதுவான

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

விவாக விடுதலை.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

[சென்ற வாரத் தொடர்ச்சி]

ஒரு சட்டத்தால் உண்டாக்கப்பட்ட குற்றங்களையும் குறைகளையும் மற்றொரு சட்டம் கொண்டே நீக்க முயலவேண்டும்' என்னும் உயரிய உண்மையை யனைவரும் ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பார்கள். ஆனால் நம் இந்து சமூகத்தைப்பொறுத்தமட்டில் சிலர் கூறலாம் "இந்து மதமும் அதற்கடிப்படையான இந்து சாஸ்திரங்களும் அவைகளைத் தழுவி நிற்கும் இந்து சட்டமும் இத்தகைய விவாஹரத்திற்கு இடம் கொடுக்க முடியாத நிலைமையிலிருக்கின்றனவே. நீவிர் கூறுவதைப்போல் விவாஹரத்து சட்டம் ஒன்று ஏற்படுத்திவிடுவோமேயானால் அது மதம், சாஸ்திரம், சட்டம் இவற்றிற்கு மாறாகவிருக்குமே இதற்கு என் செய்வது?"

இத்தகைய கேள்வி பிறப்பது நிச்சயம். அதற்குத்தக்க விடையிறுக்கவும் நாம் தயாராயிருக்கின்றோம். இவ்வாறு நம் விவாஹரத்து மசோதாவிற்குத் தடைகூறும் மத மோகத்தினர் கேள்விக்குத் தகுந்த விடைகூறி விடுவோமாயின் 'மதம்' 'சாஸ்திரம்' என்பன பேரால் எழும் கூக்குரலை யடக்கியவர் ஆவோம் என்று நினைக்கின்றோம். மதம் என்பதும் சாஸ்திரம் என்பதும் ஒரே பொருளைக்குறிக்கும் ஆகலின் நம் இந்து சாஸ்திரங்கள், அதாவது மணவிதி முதலியவைகளைப் புகட்டும் ஸ்மிருதிகள் இவ்விவாஹரத்து அல்லது மறுமணம் என்பதைப்பற்றி என்ன கூறுகின்றனவென்று சற்று கவனிப்போம். உண்மையில் இவ்விஷயத்தைப்பற்றி ஸ்மிருதியாசிரியர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருந்துதான் வந்திருக்கின்றது. சிலர் "ஒரு மனைவி சிற்சில காரணங்களை முன்னிட்டு மறுமணம் பண்ணிக்கொள்ளலாம்" என அனுமதித்துள்ளார்கள். ஆனால் சிலரோ "ஒரே முறைதான் ஓர் பெண் மணந்துகொள்ளமுடியும், ஒரே முறைதான் ஒரு தந்தை தன் மகளைத்தானம் செய்ய முடியும்" என்று விதித்துள்ளார்கள். மற்றும் ஒரே ஆசிரியர் மேலே சொன்ன இரண்டுவித அபிப்பிராயங்களைக்கொண்டிருப்பதும் ஒரு ஆச்சரியமல்ல. இது எவ்வாறாயினும், சமூகசீர்திருத்தக்காரர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் அதைப்பற்றிக்கவலை கொள்ளப்போவதில்லை. ஆனாலும் மை தீகர்களையும், மதப்பேயின் அடிமைகளையும்கூட அவர்கள் தம் சாஸ்திரங்கொண்டே திருப்தி செய்து நம் சீர்திருத்தங்களை நுழைக்க முயலுவதால் நாம் ஒருவித நஷ்டமும் அடையப்போவதில்லை.

ஸ்மிருதி யாசிரியர்களுக்குள் தலை சிறந்தவராய சிலர் விவாஹரத்து என்பதை யனுமதித்துள்ளார்கள். மனு என்பவர் IX வது அத்தியாயம் 76 வது சூத்திரத்திலும், கௌதமர் XVIII வது அத்தியாயம் 15, 17 வது சூத்திரங்களிலும், வசிஷ்டர் XVII வது அத்தியாயம் 78,79 வது சூத்திரங்களிலும், பராசரர் IV வது அத்தியாயம் 30 வது சூத்திரத்திலும், "ஒரு பெண் தக்க காரணங்கள் இருப்பின் மறுமணம் பண்ணிக்கொள்ளலாம்" என அனுமதித்துள்ளார்கள். இந்நால்வரேயன்றி நாரதர் என்னும் ரிஷியும் பின் வருமாறு கூறுகின்றார். 'தன் கணவன் காணாமற்போன காலத்தும், இறந்துபோன காலத்தும், துறவடைந்த காலத்தும், அவனது ஆண்மை குன்றிய காலத்தும், அவன் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்ட காலத்தும், ஆகிய இவ்வைந்து நியாயமான காலங்களிலும் ஒரு மனைவி மறுமுறை மணந்து கொள்ளுதல் தகுதியுடையதாகும்.' ஆகவே சாஸ்திரங்களின்படியும் தக்க காரணங்கள் இருக்குமேல் விவாஹரத்து செய்து கொள்ளுதல் இயையும்.

'விவாஹ விடுதலையும்' 'விதவா விவாஹமும்' இந்து மதத்திற்கு மாறுபட்டுள்ளன என்று கூறப்படுவதின் முக்கிய காரணம் இந்துமதத்தினர் விவாஹம் என்பதைப்பற்றிக் கொண்டுள்ள கொள்கையேயாகும். இந்து மதத்தின்படிக்கு விவாஹம் தெய்வத் தன்மையை யுடையதாகும். விவாஹம் என்பது ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இருக்கும் ஒரு ஒப்பந்தம் (Contract) அல்ல, அது தெய்வீகத் தன்மை (Sacrament) யைக் கொண்டதொரு முறையாகும் என்பர் இந்துக்கள். ஆகவே இவ்விவாஹக்கட்டைச் சட்டத்தாலோ, மனிதனாலோ ரத்து செய்தல்முடியாத காரியம். இத்தகைய மணவிடுபடாமை (Indissolubility of Marriage) இந்து விவாஹத்தின் முக்கியமானதொரு இலக்கணம் ஆகும். கணவன் உயிரோடு இருந்தாலும் அல்லது இறந்தாலும் அவனது மனைவி அம்மணக்கட்டினின்றும் விடுபடுதல் முடியாது என்பது இந்துக்களின் ஆதிக்கொள்கை. ஒரு ரிஷி சொல்லுகின்றார், 'இறந்த கணவனின் பாதியுடல் அவன்கொண்ட இல்லாள்கண் என்றும் உளது' ஆகவே கணவன் இறந்தபின்னும்கூட அவனது உடலிற்பாதி அவனது விதவையிடம் இருக்குமானால் அவன் உயிரோடு இருக்கும்போது அவனது முழு உடலும் அவன் மனைவியிடம் இருக்கும் என்று பெறப்படுகின்றது. ஆகவே விவாஹ விடுதலையையும் விதவா விவாஹத்தையும் எதிர்ப்பதின் அடிப்படையான காரணம் இந்து மணத்தின் விடுபடாத் தன்மையேயாகும். ஆனால் இத்தன்மை இந்துக்களால் வாயளவிற் போற்றப்பட்டு வந்துகொண்டிருந்த போதிலும் இது நெடுநாட்கு முன்னரே நீக்கப்பட்டு விட்டது. 1856 வது ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விதவா விவாஹச் சட்டம் (Act XV of 1856) இத்தன்மையை யடியோடு தாக்கிவிட்டது. அதுகொண்டு முதற்கொண்டு விதவா விவாஹம் இந்து சட்டத்திற்கு ஒத்ததாகிவிட்டது. ஆகவே, விதவா விவாஹம் சட்டத்திற்கு ஒத்ததானால் அதே போன்ற குணமுடைய விவாஹ விடுதலையை மட்டும் 'மதம்' 'சாஸ்திரம்' 'சட்டம்' என்பதின் பேரால் மறுப்பது ஒரு பெரிய மடமையாகும்.

இனி நாம் காணக்கிடப்பது என்னவென்றால், இந்துக்களுக்கென்று தனியாக 'இந்து விவாஹரத்துச் சட்டம்' எனவொரு சட்டம் இல்லாவிட்டாலும் கூட, தற்காலத்தில் இந்துக்கள் என்று தம்மாலும், பிறராலும், அரசாங்கத்தாராலும் கருதப்பட்டு வரும் எண்ணிறந்த மக்கள் தங்கள் விவாஹங்களை ரத்துசெய்து கொண்டேதான் வருகின்றார்கள் என்பது மன்றி, அவ்வாறு அவர்கள் செய்து கொள்ள இப்போதிருக்கும் சில சட்டங்களும் இடம் கொடுக்கின்றன என்பதுமேயாகும். அத்தகைய வழிகளைப்பற்றிச் சற்று கீழே காண்போம்.

முதலாவது பொதுவாக இந்துசட்டம் விவாஹரத்து என்பதை யனுமதிக்காவிட்டாலும், 'எந்த ஒரு ஜாதியிலாவது இருதம்பதிகள் தம்மணத்தைப் பழக்கப்படி ரத்துசெய்து கொள்ளலாம்' என்று ஒரு வழக்கம் இருந்து வந்துள்ளதாக ருசுப்படுத்தப்பட்டு விடுமேயானால் நம் நீதி மன்றங்கள் அவ்வழக்கத்தை ஒப்புக்கொண்டு அப்படி அதன்படி செய்துள்ள விவாஹரத்தையும் அங்கீகரித்துக் கொள்ளும் நிலைமையில் உள்ளன. ஆனால் அந்த வழக்கமானது, நீண்டகாலமாகவும், அந்த ஜாதி மக்கள் அனைவரும் அறியும்படியானதாகவும், அந்த ஜாதிக்காரர்களின் கட்டுப்பாட்டின்படி அனுசரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். இவ்விதமானதொரு தீர்ப்பு நம் சென்னை ஹைகோர்ட்டில் (17 Madras Page 479) சங்கரலிங்கன் வ. சுப்பன் என்னும் வழக்கில் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கின்படி திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த குயவர்கள் என்னும் ஜாதியில், 'ஒரு பெண் தன் கணவனது பரிசப்பணத்தை மீண்டும் கொடுத்து விடுவாளேல் அவள் தன் முதல் மணத்தை ரத்து செய்து கொண்ட நிலையினளாகி மறுமணம் புரிந்து கொள்ளவும் தகுதியுடையவள் ஆவாள்' ஆகவே இத்தகைய ஹிந்துக்களுள் ஒரு பகுதியினராய குயவர் என்னும் ஜாதியினர் அன்றி இவர் போன்ற வேறுபல ஜாதியினர்களும் விவாஹரத்தைக் கையாளுவதால் நம் மதம் போய் விட்டதா?

இரண்டாவதாக, இந்துக்கள் என்று தம்மாலும் அரசாங்கத்தாராலும் அழைக்கப்பட்டு வரும் பிரம்ம சமாஜத்தினர்களும் மற்றுமுள்ள இந்துக்களும், விசேஷ விவாகச் சட்டம் (Special Marriage Act) என்பதின்படி திருமணம் செய்து கொள்ளுவார்களேல், அவர்களுக்கு இந்திய விவாக ரத்துச் சட்டம் (Indian Divorce Act IV of 1869) என்பதின் கீழ் 'தம் விவாகத்தைத் தக்க காரணங்கள் காட்டி ரத்துசெய்துகொள்ளச் சுதந்திரம் உண்டு' என்று இருக்கின்றது. இதனால் நம் இந்து மதம் கெட்டழிந்து விட்டதா?

மூன்றாவது, மேலே சொன்ன இரண்டு வழிகளே யன்றி ஹிந்து தம்பதிகள் இருவர் தம் விவாகத்தை ரத்து செய்து கொள்ளவும் ஒரு சூழ்ச்சியிருக்கின்றது. அச்சூழ்ச்சிக்கு ஒரு சட்டம் இடம் கொடுக்கின்றது. அதாவது ஒரு கணவன் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிவிடுகின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே அத்தினத்திலிருந்து ஒரு ஆறு மாத காலத்துள் அவனது மனைவி அவனைப் புறக்கணித்துத் தனியே இருந்துவிட வேண்டும். அவ்வாறு மதமாறிய அக்கணவன் தன் மனைவியைத் தன்னிடம் வாழ உத்திரவு இடும்படி கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளவேண்டும். நீதிமன்றத்தார் 'அம்மனைவியை ஒரு வருடத்திற்குள்ளாகத் தன் கணவனிடம் சேர்ந்து விடும்படிக்கும் அவ்வாறு செய்யாவிடின் அவர்கள் மணம் ரத்து செய்யப்பட்டு விடும்' என்றும் ஆக்ஞாபிப்பார். அதன் பின் ஒரு வருடகாலம் அவள் தன் கணவன் மதத்தை விட்டு மதம் போய் விட்டதற்காகத்தான் அவனது மனைவியாக இருக்க முடியாதென்று கூறுவது மன்றி அவனுடன் சம்போகமும் சேர்க்கையும் வைத்துக்கொள்ளாமல் இருந்து விடுவாளேல் நீதிமன்றத்தார் உடனே "மதமாறினோர் மண ரத்துச் சட்டம்" (Native Converts' Marriage Dissolution Act) என்பதின் கீழ் அவர்களது மணத்தை ரத்து செய்து விடுவார்கள். இது ஒரு சூழ்ச்சியேதான்; இருந்தாலும் இதற்கும் சட்டம் இடம் கொடுக்கின்றது என்பது தான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம்.

"மேலே சொல்லிய மூன்று சட்டங்களேயன்றி, ஒருபெண் தன் கணவன் உயிரோடிருக்கும்போதே மறுமணம் செய்துகொள்ளவும் மற்றொரு வழியும் உண்டு. இம்முறை சட்டத்தில் (Fiction) பிக்ஷன் என்று கையாளும் ஒரு முறையின் பாற் ஏற்பட்டது. அது பின்வருமாறு:-- எவிடன்ஸ் ஆக்ட் (Evidence Act) செக்ஷன் 108ன்படிக்கு ஒருகணவனாவது தன் மனைவியை விடுத்து ஏழுவருஷகாலம ஒருவருக்கும் இருப்பிடம் தெரியாதபடி எங்கேனும்

(தொடர்ச்சி 17ம பக்கம் பார்க்க.)

காந்தியின் 'ராம ராஜ்யம்'

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)
கட்டுரை 6.
முன் தொடர்ச்சி.

ஐரோப்பாவின் சம்பந்தத்திலிருந்து நாம் அடியோடு நம்மை நீக்கிக்கொள்ளுவோமேயானால், அப்பொழுது மேலேகூறிக்கொண்டுவந்த சாஸ்திரோக்தமான முறைகளில்முன்னேற்றமடைய நாம் எவ்வளவுதான் அவாவுற்று முயற்சித்த போதிலும் கூட, நமதெண்ணம் ஈடேறுவதற்குரிய மார்க்கங்களில்லை. ஐரோப்பிய சாமான்களைப் பகிஷ்கரிக்கவேண்டுமென விரும்பும் காந்திஜியின் மனோதத்துவமானது ஒரு பெரிய, ஆழ்ந்த தப்பிதமேயாகும். நன்மைக்கோ, அல்லது தீமைக்கோ ஐரோப்பாவானது அவ்விடத்திலிருந்து கொண்டுதான் வருகிறது. அது ஒருமறைக்கமுடியாத உண்மையேயாகும். உலகத்திலுள்ளவனையமக்களாலும் அது தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையே யாகும். நம்மைப் பலவந்தப்படுத்தி ஐரோப்பாவால் நமக்குஅளிக்கப்படுவது விஷம்நிறைந்த ஒரு கிண்ணமாயிருந்த போதிலும் கூட, ஐரோப்பா செய்து கொண்டு வந்தது போல அவ்விஷத்தை நாம் மிக்க தைரியமாகவே கையாண்டு, சுதந்திரமுள்ள மக்களாக விளங்கச் செய்து கொண்டால் மட்டுந்தான் நாம் சுகமாகவும், க்ஷேமகரமாகவுமிருந்து வாழ்ந்து வரமுடியும். நானோ, அவர்களால் கொடுக்கப்படுவதை விஷமெனக்கருதவில்லை. ஆனால் ஆடவர்களுக்கு அது ஒரு பலமான ஆகாரமேயாகும்' ஜீரணிக்கச்செய்ய முடியாத வயிறுகளுக்குத்தான் அவ்வாகாரமானது ஒத்துக்கொள்ளாது. இராம இராஜ்யக்காரர்கள் ஐரோப்பாவை தற்காலிகமாக தெருக்கதவின் வழியாக வெளியே தள்ளிவிடலாம். ஆனால் அடுத்த நிமிஷமே அவள் பின்புறத்தின் ஜன்னலின்வழியாக குதித்து உள்ளே பிரவேசித்து விடுவாள். ஐரோப்பாவானது சில மூலாதாரமான தத்துவங்களுக்காகவும், கொள்கைகளுக்காகவும்,முறைகளுக்காகவுந்தான் இருந்து வருகின்றது. மேலும் ஜீவனுள்ள சில ஆண்மைக்காகவும், சக்திக்காகவும், ஊக்கத்திற்காகவும், உற்சாகத்திற்காகவும், மதத்திற்காகவுமே தான் இருந்து வருகின்றது. இந்தியாவானது அவளுடன் சிநேகிதப்பான்மையுடன் இருந்துவருவதாக இராஜி செய்து கொள்ளவேண்டும். அதைவிட்டு விட்டு, பயன் படாததுமானதும், சாரமில்லாததுமானதும், கருத்தில்லாததுமான தத்துவங்களாகிய சத்தியம், அஹிம்சை அல்லது பகிஷ்காரம் என்னும் கொள்கைகளைக்கையாண்டு, அவைகளை அனுஷ்டிப்பதாலும் ஒரு முடிவுக்கு வரமுடியுமெனக் கருதுவதானது வீண் பிரயத்தனமும் உபயோகமற்றதுமேயாகும்.

விவகாரங்களைத் தெளிவாகப்பேசி விசாரணை செய்தும், தர்க்கங்களினாலும், விவாதங்களினாலும் உண்மையை அறிந்துகவர்ன்மெண்டைசரிவர, ஒழுங்காக நடத்துவதும், சிறுபான்மையான மக்கள் திடமாகவும், உறுதியாகவும் ஒரு காரியத்தையாவது அல்லது ஒரு விஷயத்தையாவது நம்பாமலிருந்தபோதிலும்கூட பெரும்பான்மையான மக்களிடம் அதை ஒப்புக்கொடுத்து அவர்களுக்கிணங்கி நடந்து வருவதுமாகிய செய்கைகள் யாவும் ஐரோப்பாவிடமிருந்து ஒருவாறு நாம் கற்றுக்கொண்டதெனவே தான் கூறப்படவேண்டும். இராம இராஜ்யத்தில் ஆட்சி புரிவோர் ஞானமும்—புத்தியுமுள்ள, அறிவும்-யூகமுமுள்ள ஒருபோதிஞராயிருக்கக்கூடும். அவருடைய ஞானத்தாலும், யூகத்தாலும், அறிவாலும், விவேகத்தாலும் யாவரும் அவரை ஓர் சிறந்த ஒப்புயர்வற்ற மனிதரெனவே கருதிக்கொண்டு ஒப்புக்கொள்ளவும்கூடும். ஆனபோதிலும் அவருடைய கட்டளைகளும், ஒழுங்குகளும், சட்டங்களும் அவருடையகுடிகளுக்குத் திருப்தியையளிக்காவிட்டாலும் கூட, அவர்கள் அவைகளுக்குக் கீழ் படிந்து நடந்து தான் தீரவேண்டும். அவரோ தன்னுடைய மன சாட்சியையும், தன் மனதிற்கு எவைநியாயமெனத்தோன்றுகின்றதோ அவைகளை மட்டுந்தான் பின்பற்றி, நடந்து கொள்ளக்கூடியவராயிருப்பார். ஆனால், தற்கால அதாவது நவீன அரசாட்சியின் முறைமையானது இன்ன விதமாகத்தானிருக்கவேண்டுமென்பதைக் குறித்து நாமறிந்தவரையிலும், இங்கிலாந்தை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோமேயானால், அப்பொழுது நாம் பெரும்பான்மையான மக்கள் யாருக்கனுகூலமாகவும், அனுசரணையாகவும், உதவியாகவுமிருக்கின்றார்களோ அவர்கள்தான் அத்தேசத்தை அரசுபுரியும் அதிகாரிகளாக விளங்குவதை நாம் காணலாம். தனக்குதவியாகவும் அனுசரணையாகவும், அனுகூலமாகவுமிருக்கக்கூடிய கூட்டத்தினர் அல்லது கட்சியினரால் சரியென்றோ அல்லது நியாயமென்றோ அல்லது உசிதமென்றோ ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லா விஷயங்களையும்—அவைகள் அரசு முறை நிர்வாகங்களைப்பற்றியதாயிருந்தபோதிலும் சரியே, அல்லது கொள்கைகளைக்குறித்தவைகளாயிருந்த போதிலும் சரியே, அவைகள் யாவும் யுக்தமானவைகள் தான் என்பதைக்குறித்தோ அல்லது நியாயமானவைகள் தானென்பதைக்குறித்தோ தனக்கு ஏதாகிலும் சிறிதளவு சந்தேகமிருந்தபோதிலும் கூட தன்னுடைய சந்தேகத்தை நிலைநாட்டுவதற்காக வேண்டியாவது அல்லது உறுதிப்படுத்துவதற்காகவேண்டியாவது ஒரு போதும் தன்னுடைய மனசாட்சியை நாடி, உதவிக்கழைக்கும் வழக்கமில்லை. ஆனால் அவர்களுடைய செய்கைகளே நியாயமானதாகவும், ஒரு சமயம் தானே தப்பிதமுள்ளவனாகவுமிருக்கக் கூடுமெனக்கருதி அகங்காரமின்றி, பணிவுடன் நடந்துகொள்ளுகின்றான்.

இத்தகையச் செய்கைக்கும், முறைமைக்கும் ஆதாரமாயிருந்து வருவதும், மூலகாரணமாயிருந்து வருவதும் சமத்துவமேயாகும். ஜனசமூகங்களுக்கிடையே பாரம்பரியமாய் பல்வேறு வித்தியாசங்களைப் பாராட்டிக்கொண்டு வரப்பட்டப் பலஜாதியினரும், வகுப்பினரும் வாழ்ந்து கொண்டு வருமிந்நாட்டில், இம்முறையானது திருப்திகரமாக நடைபெற்றுக்கொண்டு வருமாவென்பது எனக்குப் பெரிதும் ஓர் சந்தேகமாகவேதானிருந்து வருகின்றது. அரசியல் துறையில் தற்காலம் இந்தியாவில் நடைமுறையிலனுஷ்டிக்கப்பட்டு வரும் அனுபவங்களை நாம் கூர்ந்து, கவனித்துக்கொண்டு வந்தோமேயானால், அப்பொழுது தொடர்ச்சியாக வரவேண்டிய மந்திரிமார்களைவிடுத்து சர்வாதிகாரிகளை மட்டும் ஒருவர்பின் ஒருவராய் ஸ்தாபிதம் செய்துகொண்டுவரும்படியான மனோபான்மையே, மக்களுக்கதிகமாக யிருந்து கொண்டுவருவதை நாம் காணலாம். ஆனால், நான் இப்பொழுது சர்வாதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைமையானது கவர்ன்மெண்டின் நியாயமென நிரூபிக்கத்தக்க முறைமையாகுமா? அல்லது முறைமையாகாதா? என்னும்பிரச்சினையைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தை அறிவிக்க விரும்பவில்லை. சர்வாதிகாரிகளைத்தேர்ந்தெடுக்கும் முறைமையானது இதற்கு முன் உலகப்பொது விதியாயிருந்துகொண்டு வந்ததானது யாவருமறிந்த விஷயமேயாகும். ஆனால் நாளடைவில் விவாதங்களினாலும், தர்க்கங்களினாலும், பெரும்பான்மையான ஓட்டுகளாலும்தான் ஒரு அரசாங்கமானது நடாத்தப்படுகின்றதென்கின்ற உண்மையை நாம் ஐரோப்பாவிலுள்ள அரசாங்கங்களின் மூலியமாய் அறிந்துகொண்டோம். அவர்கள் தர்க்கரீதியாக ஒவ்வொரு விவகாரங்களையும், விஷயங்களையும் விவாதித்தறிந்து கொள்ளுவதென்கின்ற முறைமையைப்பின்பற்றி, அனுசரித்துக் கொண்டு வருவதினால்தான் ஐரோப்பாவானது சுபாவமாகவே பலம்பொருந்திய நாடாகக்காணப்படுகின்றதென நான் கருதுகின்றேன். மேலும் மேற்கு தேசவாசிகளான அவர்களுக்கு பாரம்பரியமாய் அவர்கள் அனுசரித்துவரும் அவர்களுடைய கிறிஸ்துமதத்தின் மூலமாகவும் இது யேற்பட்டிருக்கலாமெனவும் கருதுகின்றேன், இவ்விஷயத்தில் நான் பைபளில் கூறப்பட்டிருக்கும் ஆதாரங்களைக்கொண்டே உரைக்கின்றேன்.

இப்பொழுது சிறிது காலத்துக்கு முன்பாக என்ன நடந்ததென்பதைப்பற்றி சிறிது யோசித்துப்பாருங்கள். முதலாவதாக, கராச்சியில் காந்திஜீ அவர்களுக்குக்கறுப்புக் கொடி பிடிக்கப்பட்டு கருப்புபுஷ்பமுமளிக்கப்பட்ட ஒரு சம்பவமானது நடைபெற்றது. சிகப்பு உடைதரித்த வீரர்கள்தான் இத்தகையச்செய்கைக்குக் காரணமாவார்கள். அவர்கள்யாவரும் பகத்சிங் தூக்கிலிடப்பட்டுக்கொல்லப்பட்டதற்கு, காந்திஜீதான் சவாப்தாரியாவாரென தங்களுடைய அறியாமையின் பயனாக நினைத்துக்கொண்டு அவ்வாறு செய்தார்கள். எதிர்பாராது நேர்ந்த இச்சம்பவத்தால் காந்திஜீ அவர்கள் பிரமித்து விட்டார்கள். அப்படியிருந்த போதிலும்கூட அவர்மிக்க தைரியமும், சாமர்த்தியமுமுள்ள புருஷராகையால் அவ்விதச்சம்பவத்தால்தான் எவ்வளவு தூரம் பிரமிப்படைந்து விட்டாரென்பதை ஒருவருக்கும் காட்டிக்கொள்ளவேயில்லை. ஆனால் கடைசியாக நடைபெற்ற சம்பவந்தான் எல்லாவற்றையும்விட அதிமுக்கியமானதாகும். சிகப்பு உடைதரித்த வீரர்கள் யாவரையும் ஒன்று சேர்த்து ஒரு மகாநாடுகூட்டினார். ஆனால் அவர் எவ்வளவுதான் உரைத்து வாதாடியபோதிலும்கூட அதனால் ஒருவித நன்மையும் ஏற்பட்டு விடவில்லை. அவர் நிச்சயித்து தீர்மானம் செய்ததுதான் சரி என்பதைக்குறித்து சிகப்பு உடைதரித்த வீரர்களுக்கு நம்பிக்கையுண்டாகும் வண்ணம் அவரால்செய்யமுடியவேயில்லை, அவர்களை அலக்ஷியம் செய்வதை விடுத்தும் அல்லது அவர்களுடைய முடிவான அபிப்பிராயத்தை அங்கீகரிப்பதை விடுத்தும் அவர்கையாண்ட முறைமையானது மிக்கத்துணிகரமுள்ளதாகவும், வெற்றியையளிக்கக்கூடியதாகவுமிருந்த போதிலும் கூட நியாயமற்றச்செய்கையெனவே கூறப்படவேண்டும். அவருடைய நிபந்தனைகளின்படியும், ஏற்பாட்டின்படியும் அவர்தலைமைவகிப்பதானது (இதை கவனிக்கவேண்டும்) அவர்களுக்குப்பிரியமில்லாதிருக்கும் பக்ஷத்தில் அவர் இவ்விவகாரங்கள் முதலியவைகளைவிட்டு விலகி ஏகாந்தமாயிருந்து உண்ணாவிரதத்தையனுஷ்டித்து மரணமடைந்து விடுவதாக உரைத்தார்.

இரண்டு காரணங்களை முன்னிட்டு இம்முறையானது தப்பிதமெனவே நான் உரைக்கின்றேன். இக்கொள்கையானது சர்வசாதாரணமானதும் கேவலமானதுமான முறைமையில் பயமுறுத்தக்கூடியதேயா

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

சாரதா சட்டமும் வைதீகர் அட்டகாசமும்.

(திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம்அம்மாள் எழுதுகிறார்)

செப்டம்பர்௴ 8-ந்தேதிடிய இந்திய சட்ட சபையில் சாரதா சட்டத்தை அடியோடு தொலைக்கவும், அல்லது திருத்தவும் மசோதாக்கள் கொண்டு வந்திருப்பதை அறிந்தது முதல் மனம் பதறுகிறது. ஆரம்பத்திலேயே அச்சட்டத்தை ஒன்றுக்கும் உதவாத மாதிரியில் செய்து விட்டு இப்போது அதையும் ஒழிக்கப் பார்ப்பது "குதிரை தள்ளினது மாத்திரமல்லா குழியும் தோண்டின" கதைக்கு ஒப்பாகும்.

ஆகவே, இனி நமது நாட்டில் சட்டங்களில்லாமல் சீர்திருத்தமடைவதென்பது வீண்புரளி. சட்டங்கள் சட்டசபை அங்கத்தினர்களால் நிறைவேற வேண்டி இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்களால் ஜன சமூகத்தின் குறைகள் தீராத பட்சத்தில், அரசாங்கம் தலையிட்டு ஜனங்களுடைய குறைகளை சீர் திருத்த வேண்டியது முறை.

ஆனால், "விவாகமென்பது அவரவர் சொந்த சமூக, மத சம்பந்தமான விஷயம். இதில் சட்டம் ஏற்படுத்துவதும், அரசாங்கம் தலையிடுதலும் கூடாது. இன்று கல்யாணத்திற்கு சட்டம் கொண்டு வருவார்கள், நாளை கருமாதிக்கும் சட்டம் கொண்டு வருவார்கள். இப்படி ஒவ்வொன்றுக்கும் சட்டம் ஏற்படும். ஆகையால் முதல் சட்டமாகிய சாரதா சட்டத்தையே தொலைத்து விட வேண்டும். அரசாங்கம் இது விஷயத்தில் மத நடுநிலைமை வகிக்க வேண்டு'மென்று வைதீகர்கள் வானமளாவக் கத்தி, குதித்துக் கூத்தாடுவார்கள். இந்த வைதீக அட்டகாசங்களுக்கும், பிதற்றுக்கும் அரசாங்கம், அஞ்சவும் தலைசாய்க்கவும் கூடாது என்கின்றேன்.

"மத நடுநிலைமை" என்றால் என்ன? ஒரு மதத்தை உயர்வாகவும், மற்றொரு மதத்தைத் தாழ்வாகவும் நடத்துவதோ, ஒரு மதத்துடன் சேர்ந்து மற்றொரு மதத்தை நசுக்குவதோ முதலானகாரியங்கள் செய்யாது நடுநிலைமை வகித்து எல்லா மதங்களையும் பொதுவாக பார்ப்பதுதான் "மத நடுநிலைமை." ஆனால மதத்தின் பேரால் நடக்கும் பழக்க வழக்கங்களினால் ஜன சமூகத்திற்கு இன்னல் விளையுமாகில, அந்தப் பழக்க வழக்கத்தைச் சட்டத்தின் மூலம் தகர்த்து, ஜனங்களைக் காப்பது துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் அரசாங்கத்தின் கடமையல்லவா?

இன்று சாரதா சட்டத்தினால் மதத்திற்கோ, சாஸ்திரத்திற்கோ பங்கம் விளையுமென்று சொல்லுவார்களேயானால், ஸ்வயம்வரம் நடந்ததினாலும், காந்தர்வ விவாகம் நடந்ததினாலும், உடன் கட்டை ஏறும் கொடிய வழக்கத்தை ஒழித்ததினாலும், மதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் பங்கமோ அழிவோ உண்டானதா? இல்லையே! ஆகையினால் சாரதா சட்டம் நிறைவேறுவதினால் மதத்ற்கும், சாஸ்திரத்திற்கும் யாதொரு பங்கமும் ஏற்படாதென்பது திண்ணம். அப்படி மதத்திற்கு பங்கமேற்பட்டு, மக்கள் வாழ்க்கைக்கு நன்மை ஏற்படுவதாயிருந்தால் மக்களுக்கு நன்மை தரத்தக்க விஷயத்தை தான்நாம் கைகொள்ள வேண்டும்.

சாரதா சட்டத்தைக் குழி தோண்டிப் புதைக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறவர்கள் பெண்களை அழுத்தி அடிமைப் படுத்துவதில் ஆசை கொண்ட மூர்க்கர்களே யாவர்.

தற்சமயம் பெண்களின் அபயக் குரலைகேட்டு ஆதரிக்க வேண்டியவர்கள் அரசாங்கத்தாரும், சமூகசீர்திருத்தவாதிகளும்;இந்திய சட்டசபை அங்கத்தினரும் ஆவார்கள். மக்களைத் துன்புறுத்த எண்ணங்கொண்டு கையாண்டுவரப்பட்ட பழக்க வழக்கங்களை கடவுளின் பேரிலும், மதங்களின் பேரிலும் பழியைச் சுமத்திக் கொண்டு இருக்கும் மதப் பித்தர்களுடைய மசோதாக்கள் சமூகச் சீர்திருத்த வாதிகளான திரு ஹரிவிலாஸ சாரதா, திரு. ஷண்முகம், திரு. ஹரிசிங்கவர் முதலான சட்ட சபை அங்கத்தினர் முன் பஞ்சாகப் பறக்குமென்கிற தைர்யமிருக்கிறது. தற்சமயம் திரு. ஏ. இராமசாமி முதலியாரும், திரு. ஜெயகரும் இல்லாதது வருந்தத் தக்கதே.

சாரதா சட்டமே! உன் நிலை எப்படியோ? இந்திய சட்ட சபை அங்கத்தினர்களே! பெண் மக்கள் துயரத்தை அழிக்க முன் வாருங்கள்!

வாக்காளர்களே! சாரதா சட்டத்திற்கு விரோதிகள் நமது பாரத தேசத்துரோகிகள் என்று நினையுங்கள். இவர்கள் தேசியம் பேசினால் சுயநலப்புலிகள் என்று கருதுங்கள்:

மாகாண 2-வது சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு

திருவாரூர்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. விருதுநகரில் கூடிய மூன்றாவது மகாநாட்டுத்தீர்மானங்களையும் பெண்கள் மகாநாட்டுத் தீர்மானங்களையும்வாலிபமகாநாட்டுத்தீர்மானங்களையும்இம்மகாநாடு ஏற்றுக்கொள்வதுடன்அத்தீர்மானங்களை அநுபவத்தில் நிறைவேற்றுவதற்கு ஆகவேண்டிய காரியங்களை செய்யவேண்டியது தொண்டர்கள்கடமை என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

2. சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை பரப்புவதற்கு தமிழ்நாட்டுத் தொண்டர்கள் ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டுகட்டுப்பாடாக பாடுபடவேண்டுமென்று நமதுநாட்டுபல்வேறுஇடங்களில்சுயமரியாதைக்கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்கவும்அங்கத்தினர்களைச்சேர்க்கவும், மகாநாடுகள் பொதுக்கூட்டங்கள் மூலம் பிரசாரம் செய்யவும்,சுயமரியாதைஇயக்கப் பிரசுரங்களைப்பரப்பவும் முயற்சிகள்செய்யவேண்டு மென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

அடியில்கண்டவர்களை இதற்கு ஓர் திட்டத்தை நிறுவி அதை அமுலுக்குக்கொண்டுவர அவசியமான எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

திருவாளர்களான கே. வி. அழகர்சாமி, சி. நடராஜன், சாமிசிதம்பரனார், பி. எஸ். தண்டபாணி, ஜெ. வி. லிங்கம், கே. பொன்னம்பலம், என். பி. காளியப்பன், ஏ. ஆர்.சிவானந்தம், கே. ராமையா, ஏ. எஸ். கனகராஜன், கே. ஏ. எம். மாணிக்கம், பரமசிவம், டி. கலியபெருமாள்.

3. புதுக்கோட்டை கலக விசாரணையின் முன் சில்வைதீகர்கள் நமது சுயமரியாதை இயக்கமே கலகத்துக்குக்காரணமென்று தப்பெண்ணம் கற்பிக்க முயலுவதை இம்மகாநாடு வன்மையாகக்கண்டிக்கிறது.

(a) நமது நாட்டில் நிலவும் சமூகக்கொடுமைகளை ஒழிப்பதற்கு நியாயமான முறைகளைக் கையாளவே நமது இயக்கம் பாடுபடுவதால் மக்கள் பலாத்காரத்தை கைகொள்வதை சுயமரியாதை இயக்கம் தடுத்து நிற்கிறது. இவ்வுண்மைக்குமாறாக இவ்வியக்கத்தின் பேரிலும் இவ்வியக்கத்திலீடுபடும் தொண்டர்களின்பேரிலும் வீண்பழிசுமத்தித் தமது பழைய கொடுமை ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள முயலும் புதுக்கோட்டை வைதீகர்களின் சதியாலோசனையை பொது ஜனங்களும் அதிகாரிகளுமுணர வேண்டுமென்று இம்மகாநாடு கோருகிறது.

4. மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் சங்கத்திற்கு இவ்வருஷ நிர்வாகஸ்தர்களாக அடியில்கண்டவர்களை இம்மகாநாடு நியமிக்கிறது.

தலைவர்: கே. வி. அழகர்சாமி.

உபதலைவர்கள்:-ஏ. ஆர் சிவானந்தம் கோயமுத்தூர். சி. நடராஜன் மாயவரம்.

காரியதரிசிகள்:- வாசுதேவன் திருச்சி, எஸ். வி. லிங்கம் மாயவரம், கே. ராமையா மாயவரம்.

பொருட்பாளர்:-ச.ம.சி.பரமசிவம்

கமிட்டி மெம்பர்கள்:- பி எஸ். தெண்டபாணி, சாமி சிதம்பரனார், என். பி. காளியப்பன், உத்தண்டன் விருதுநகர், ரங்கராஜ், உடுமலை கனகராஜன், எஸ். ஜி. சொக்கலிங்கம், எஸ். சி. ரங்கசாமி சேலம், குற்றாலலிங்கம் திருநெல்வேலி, கே. கலியபெருமாள் திருச்சி, எ. பொன்னம்பலம், கே. ஏ. எம் மாணிக்கம்.

5. சாரதா சட்டத்தைமாற்ற வேண்டுமென்றும், அடியோடு ரத்து செய்துவிடவேண்டுமென்றும், நமது மாகாண இந்திய சட்டசபை அங்கத்தினர் ஒருவர் தீர்மானங்கொண்டு வந்திருப்பதை இம்மகாநாடுகண்டிக்கிறது.

(a) சர்க்காரார் அதற்கு அநுகூலமாய் இருக்கக்கூடாதென்றும் அதற்கு விரோதமாய் இருந்து அதைத்தோற்கடிக்கவேண்டுமென்றும், தெரிவித்துக்கொள்கிறது

6. நாடகத்தொழிலில் பொதுமக்களிடமிருந்து பெரிதும பணம் திரட்டியவரும், திரட்டிக்

(தொடர்ச்சி 15-ம்பக்கம்பார்க்க)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாமிச உணவைப்பற்றிய தடைக்கு விடை.

(மயிலை: சீனி. வேங்கடசாமி)

21—6—31ல் வெளியான "குடி அரசி"ல் நான் 'மாமிசஉணவைப்பற்றிய சில குறிப்புகள்' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். எனது நண்பர் திரு. எ. சுப்பையா அவர்கள் நான் எழுதியதற்கு "மறுப்பு" ஒன்று 9—8—31ல் வெளிவந்த "குடி அரசி"ல் எழுதியிருப்பதை வாசகர்கள் படித்திருப்பார்கள். மறுப்புக்கு விடை எழுத வேண்டியது எனது கடமையாகையால் இங்கு இதனை எழுதுகிறேன்.

திரு. சுப்பையா அவர்கள் தக்க ஆதாரங்களோடு மறுப்பு எழுதுவாரானால் அதை ஒப்புக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன். உண்மை வெளிவரவேண்டும் என்பது தான் எனது கொள்கையேதவிர ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் நியாயத்திற்கும் சயன்ஸுக்கும் (Science) பொருத்தமான உண்மைகளை மறுக்கவேண்டும் என்பது எனக்குக் கருத்துக்கிடையாது; மறுக்கவும் முடியாது.

இனி மறுப்பு என்றால் என்ன என்பதை விளக்கிவிட்டு தடைக்கு விடையெழுதுவோம். மறுப்பு என்றால் ஒருவர் உண்டு என்று சொல்லுவதை இல்லை என்று தக்க ஆதாரத்துடன் மறுக்க வேண்டும். நான் எழுதிய மாமிச உணவு என்னும் கட்டுரையில் வெண்ணெய், நெய், மீன் எண்ணெய், மாமிசக்கொழுப்பு, ஆடு முதலிய பிராணிகளின் ஈரல், மூளை, மாமிசம் முதலியவைகளில் இரும்புசத்து, தாமிரசத்து, ஆந்தராகச்சத்து, வைட்டமின் என்னும் ஜீவசத்துக்கள் இருக்கின்றன என்றும் இவற்றையெல்லாம் கைதேர்ந்த டாக்டர்கள் (உணவைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள்) சயன்ஸ் ஆராய்ச்சி மூலமாகக் கண்டறிந்திருக்கிறார்கள் என்றும் எழுதியிருந்தேன். திரு. சுப்பையா அவர்கள் நான் எழுதியவற்றில் ஏதேனும் ஒன்றை மறுத்திருக்கிறாரா? அதாவது இந்த இந்த பொருளில் இந்த இந்த சத்துக்கள் இல்லை, அல்லது ஜீவசத்துக்கள் இல்லை என்று எழுதியிருந்தால் அது தான் மறுப்பு என்று சொல்லப்படும். இந்த விஷயத்தில் இது இது தவறு என்று எடுத்துக்காட்டாமல் மொத்தத்தில் மறுப்பு என்று பெயர் சொல்லி விட்டு புறம்பான விஷயங்களை எழுதியிருக்கிறார்.

அவர் எழுதிய மறுப்பில் இரண்டு விஷயங்கள் காணப்படுகின்றன. அதாவது மாமிச உணவு நோயை உண்டாக்கும் என்பதும் மரக்கறி உணவு ஆயுளை விருத்தி செய்யும் என்பதும் அவர் கருத்து. இவருடைய கருத்துக்கள் தவறு என்பதைப்பின்னால் விளக்குவோம். முதலில் வரிசைக்கிரமமாக மறுப்புக்கு மறுப்பு எழுதப்புகுவோம்.

"நம் பூர்வகுடிகளாகிய குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலமக்கள் மாமிச உணவு உபயோகித்து வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் யாதொரு ஆதிக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் அடிமைப்பட்டுக்கிடந்ததாகவுமில்லை. வீரமற்று, ரோஷமற்றுமிருந்ததாகவுமில்லை"

என்று எழுதியிருக்கிறார். திரு சுப்பையா அவர்கள் பழையசங்க இலக்கியங்களைப் படித்துப்பார்த்தால் நம் பூர்வ குடிகளாகிய மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை நில மக்கள் எல்லோரும் மாமிச உணவை தாராளமாகச்சாப்பிட்டார்கள் என்பது விளங்கும். இதை அவர் தெரிந்து கொள்ளாமல் நமது பூர்வ மக்கள் மாமிசம் சாப்பிடவில்லை என்று சொல்லுவது மிகவும் ஆச்சரியமாகயிருக்கிறது. திரு சுப்பையா அவர்கள் பழைய இலக்கியங்களை ஊன்றிப்படித்து இந்த உண்மையை அறிவாராக. நமது பூர்வ தமிழர்கள் மாமிசம் சாப்பிட்டு வந்தபடியால் தான் அவர்கள் வீரதீரமும் சுயமரியாதையும் சுதந்திரமும் உடையவர்களாயிருந்தார்கள் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகின்றேன்.

"ஆரிய மிலேச்சர்கள்" வந்து ஜாதிப்பிரிவுகளை உண்டாக்கிய படியால் தான் இந்தியா அன்னிய அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டது என்று சுப்பையா எழுதுகிறார்" இந்தியா அடிமைப்பட்டதற்குப் பல காரணங்களுண்டு ஜாதிப்பிரிவு ஒரு காரணமிருக்க மரக்கறி உணவும் இன்னொரு காரணமாகும். இவையன்றி இன்னும் பல காரணங்களுமுண்டு. அவற்றையெல்லாம் இங்கு எழுதுவதற்கு இது இடமல்ல.

"மனிதர்களைக்கொன்று அவர்களின் மாமிசத்தைப் புசிப்பதால் தேகத்திற்கு இன்னும் அநேக நன்மைகள் ஏற்படுமென்று பிரசாரம் செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதாயிருந்தால் மாமிச வெறி பிடித்த வலியார்கள் எளியார்களை வாட்டி வதைத்துத் தின்று கூடிய சீக்கிரத்தில் இந்தியாவை முன்னேற்றத்துக்குக்கொண்டு வந்து பழுக்கவைத்து விடுவார்கள்" என்று திரு. சுப்பையா எழுதுகிறார். மனிதரைக் கொல்லவேண்டுமென்றும் மனித மாமிசம் சாப்பிடவேண்டுமென்றும் இதுவரையில் ஒருவரும் சொல்லவில்லை. ஆனால், சைவ சித்தாந்தியும் திருநெல்வேலிச் சைவருமாகிய திரு. சுப்பையா அவர்களால் குரு என்றும் தலைவரென்றும் வணங்கப்படுகிற சைவ மடாதிபதிகள் மனிதர்களைக் கொலை செய்து கொண்டு இந்தியாவையும் சைவ சமயத்தையும் நாளுக்கு நாள் பழுக்கவைத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அதையும் சுப்பையா வாய்திறவாமல் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்.

பிறகு "மரக்கறி உணவை உண்டால் பலசாலிகளாயிருப்பார்கள்" என்றும் "மாமிச உணவில் கிருமிகள் இருக்கின்றன" என்றும் எழுதுகிறார். மாமிசத்தில் கிருமிகள் உற்பத்தியாவது போலவே மரக்கறி உணவிலும் கோடிக்கணக்கான கிருமிகள் உற்பத்தியாகின்றன. உதாரணமாக, பருப்பு காய்கறிகளைச் சமைத்து இரண்டொருநாள் வைத்துப் பிறகு பார்த்தால் அவற்றில்கிருமிகள் உற்பத்தியாயிருப்பதைக்காணலாம். அவ்வாறே மாமிசத்திலும் உற்பத்தியாவதையுங்காணலாம். கிருமிகளில் இரண்டு விதம் உண்டு. ஒருவிதகிருமிகள் தேகசுகத்தை விருத்திபண்ணுகின்றன. இன்னொருவித கிருமிகள் தேகசுகத்தைக்கெடுக்கின்றன தயிரில் தேகத்துக்கு சுகத்தை உண்டுபண்ணுகிற கிருமிகள் ஏராளமாயிருக்கின்றன, தயிரைச் சாப்பிடும்போது அதனுடன் இந்தக் கிருமிகள் நமது தேகத்தில் சென்று விடுகின்றன. இவ்விதம் நன்மையும் தீமையும் செய்கிற கிருமிகள் எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கின்றன. ஆகவே 'மாமிசத்தில் தான்கிருமிகள் இருக்கின்றன' என்று சொல்லுவது தவறு. "மாமிசம் சீக்கிரம் கெட்டுப்போகிறது' என்றும் 'மரக்கறி உணவு கெடுவதற்குச் சிறிது நேரம் செல்கிறது" என்றும் திரு சுப்பையா சொல்வதாயிருந்தால் அதை நாம் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

"மாமிசம் உண்பதால் ஆயிரக்கணக்கான வியாதிகள் உண்டாகிறது" என்பதாகச் சொல்லுகிறார். மரக்கறி மாத்திரம் புசிக்கிறவர்களுக்கு ஆயிரக்கணக்கான வியாதிகள் உண்டாகிறதில்லையா? இதன் காரணமென்ன?

பழைய டாக்டர்கள் மரக்கறி உணவுதான் சிறந்தது என்றும் மாமிச உணவு சாப்பிடக்கூடாதென்றும் எழுதியிருப்பது உண்மைதான். ஆனால், உணவைப் பற்றிநன்குஆராய்ந்ததற்காலத்து டாக்டர்கள் மாமிச உணவையும் மரக்கறி உணவையும் இரண்டையும் கலந்து சாப்பிடவேண்டும் என்றும் இப்படிச்சாப்பிட்டால் தான் தேகசுகத்தோடிருக்கமுடியும் என்றும் சொல்லுகிறார்கள்.

'உணவும், உடல் நலமும்' என்னும் புத்தகம் எழுதிய ஜான்சன் என்பவர் உணவு முறையை நன்காராய்ந்தவர். (Health and Diet by Cecil Webb-Johnson M. D.) அவர் கீழ்வருமாறு எழுதுகிறார்.

A person would have to consume a vast amount of Vegetables in order to obtain the amount of Proteids contained in a few ounces of lean beef or mutton. Besides which, *animal Proteids seems to develop mental and bodily energy to a much greater extent than do vegetable proteids.* என்று எழுதியிருக்கிறார். இன்னும் அவர் அதே புத்தகத்தின் இன்னொரு இடத்தில் கீழ்வருமாறு எழுதுகிறார். Though we may also obtain proteins from certain Vegetables, they do not seem to produce mental and bodily energy to the same extent as animal proteins.

இன்னும் பல ஆசிரியர்களின் கருத்துக்களை இங்கு எடுத்துக்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க,

திருவாரூரில் தொண்டர் மகாநாடு.

தலைவர் உரை.

வருணாச்சிரமப்பாதுகாப்பே சுயராஜியக் கொள்கையாகும்.

30-8-31ந் தேதி காலை 9 மணிக்கு திருவாரூரில் கூடிய மாகாண இரண்டாவது சுயமரியாதைத்தொண்டர் மகாநாட்டின் தலைவர் திரு கே. வி. அழகர்சாமி அவர்களின் சொற்பொழிவு.

வரவேற்புத் தலைவர் அவர்களே! சகோதரிகளே!! தோழர்களே!!!

இம்மகாநாடு ஏன்?

விருதுநகர் மகாநாடு கூடி மூன்று வாரங்களுக்குள் மற்றொரு மகாநாடு தேவைதானா? என்னும் சந்தேகம் பலருக்கு ஏற்படலாம். விருதுநகர் மகாநாட்டில் பொது ஜனங்கள் சில திட்டங்களை வகுத்துப் போயினர். அவைகளைச் செயலில் கொண்டுவர வேண்டியது தொண்டர்கள் கடமையாகும். ஆகையால் தமது கடமை இன்னதென் றுணர்ந்த தொண்டர்கள் விருதுநகர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான வழிகளைப் பற்றி யோசிப்பதற்காகவே இன்று கூடியிருக்கின்றனர். தோழர்களே! நான் இங்கு நீண்ட பிரசங்கம் செய்து நேரத்தை வீணாகக் கழிக்க விரும்பவில்லை. மேலும் இங்கு பிரசங்கம் கள் செய்வதற்காக நாம் ஒன்று கூடவில்லை. நமதுபிற்கால நிலைமை எந்தகையதாக விருக்கவேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காகவே நாம் இன்று கூடி இருக்கின்றோம்.

உலக ஜனசமூக முன்னேற்ற நிலைமைமிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலோ வைதீகப் பணக்காரர்களின் ஆர்ப்பாட்டம் ஏழைகளின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கிறது. சுதந்தரமென்னும் பெயரால் இங்கு நடிக்கும் நடிகர்களத்தனை பெயரும் வைதீகத்திற்கு கீழ்ப்படியும் குழந்தைகளாக விருக்கின்றனர்.

வைதீக பாதுகாப்புத்தான் சுயராஜியம்

வரப்போகும் சுயராஜிய சர்க்காரில் வைதீகத்திற்குப் பாதுகாப்பு சரியான முறையில் அளிக்கப்படுமென உறுதி கூறப்பட்டுளது. வைதீகத்திற்குப் பாதுகாப்பளிப்பதிலிருந்து தீண்டாமையும், ஏழ்மையும், சாதி வித்தியாசமும் இந்நாட்டை விட்டு ஒரு போதும் ஒழியப்போவதில்லையென்பது தெளிவாகிவிட்டது. தீண்டாமையும், ஏழ்மையும், சாதி வித்தியாசமும் ஒழியாத நிலைமையில் சுயராஜியம் கிடைத்தாலும் அந்தச்சுயராஜிய சர்க்கார் சமாதானத்தோடும், நீடித்தும் வாழ முடியாதென்பதும் திண்ணம்.

சுயராஜியம் கேட்பவர்.

இனிசுயராஜியம் கேட்பவர்களாயிருப்பவர்கள்நிலை எத்தகையதாயிருக்கின்றதென்பதையும் கவனித்தல் வேண்டும். இங்கிலாந்தின் புதிய தேசிய சர்க்காரின் தலைவரும் பிரிட்டிஷ் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமாஜி சர்க்காரின் முதன் மந்திரியுமான தோழர் மாக்டொனல்ட் தொழிலாளர்கள் தான் தியாகம் செய்ய வேண்டுமெனக் கூறுகின்றார். ஏழை

வைதீகமும், பணக்காரத்தன்மையும் அழியவேண்டும்.

கள் தியாகம் செய்வதும் அத்தியாகத்தினாலேற்படும் பலனை வைதீகப் பணக்காரர்கள் உபயோகப்படுத்திக்கொண்டு சமாதானத்துடன் வாழ்வதுமான முறையை ஏழைகளை வலுக்கட்டாயப்படுத்தி பணக்காரர்கள் தங்கள் வாழ்க்கையை சௌகரிய முடையதாக ஆக்கிக்கொள்ள விரும்புகின்றனர் என்பதாகத்தான் கூறவேண்டும்.

பணக்காரர் நிலைமை.

பொருளாதாரத்திலும், தாராள புத்தியிலும் சிறந்ததெனத் தன்னைக் கூறிக்கொள்ளும் அமெரிக்காவின் பெடரல் பாங்கியோ வேலையில்லாத் தொழிலாளர் நிதியில் சிக்கனத்தை ஏற்படுத்தினாலொழிய இங்கிலாந்திற்கு கடன் கொடுத்துதவுவது நிறுத்திக்கொள்ளப்படுமென்று கூறுவதாகப் பலமான வதந்தி உலவுகின்றது. ஆகவே உலகத்திலுள்ள சகல பணக்காரர்களின் திருஷ்டியும் ஏழைகளைத் தியாகம் செய்யச் சொல்லித் தூண்டி அதன் பயனைத் தாங்கள் சௌகரியம் தேடிக்கொள்ள விரும்புகின்றனர் என்பது தெளிவாகவில்லையா?

பணக்காரத்தன்மை இத்தகையமகா உன்னத நிலைமையடைந்து கொண்டே போகுமாயின் ஏழைகளின் கதியென்ன என்பதை யோசித்துப்பாருங்கள். வரி உயர்த்துவதென்னும் பிரச்சினை கிளம்பியவுடன் பணக்காரர்கள் தான் கிளர்ச்சிசெய்ய ஆரம்பிக்கின்றனர். காரணம் வரி உயர்வு ஏற்படுமாயின் தங்கள் இரும்புப்பெட்டியின் கனம் குறைந்துவிடுமென்பதேயாகும். சிறு பான்மையோராகிய தங்கள் கூக்குரல் கிளர்ச்சியை உண்டுபண்ண முடியாதெனக் கருதியே ஏழைகளையும் கூலி கொடுத்துக் கூவ ஏற்பாடு செய்கின்றனர். பசிக் கொடுமையைத் தணித்துக்கொள்ள விரும்பும் ஏழைச்சகோதரர்கள் பணக்காரர்களின் தந்திரத்தை உணராது இவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு வரி மறுப்புச்செய்ய ஆரம்பிக்கின்றனர். இதுதான் வரி மறுப்புப் புரட்டென்பது. ஆகையால் தான் இங்கிலாந்து வரி உயர்த்த வேண்டுமென்ற தொழிற்கட்சி சர்க்காரை ஒழித்துவிட்டு, தொழிலாளர் சகாய நிதியில் கைவைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு கூடியவர்கள் இன்று கூட்டுக்கட்சி மந்திரி சபையை அமைத்திருக்கின்றது. இதே மாதிரியான புரட்டுதான் இந்தியாவிலும் வரி மறுப்பின் பேரால் ஏற்பட்டு ஏழைகளை அதற்காக தியாகம் செய்ய ஏற்பாடுகள் செய்து பணக்காரர்கள் சௌகரியமடைய விரும்புகின்றனர். இம்மாதிரியான புரட்டுகளை வெளிப்படுத்த வேண்டியதும், அவைகளையொழிக்க வேண்டியதும் நமது கடமையாகும்.

மதமும்—கடவுளும்.

மதமும் கடவுளும் பணக்காரர்களின் மறைவிடமாக விருக்கின்றனவேயன்றி மக்களின் நலன் கோரி இதுவரையில் குறிப்பிடத்தக்கதான முன்னேற்றத்தை அளித்திருக்கின்றனவென்று கூறமுடியாது. மனித இரத்தத்தைத் தண்ணீராய் மாற்றி, மனிதன் தன்னை ஓர் மனிதன் தான் என்றுகூட கருதுவதற்கு இடங்கொடாது மக்களை மிருகப்பிராயத்திற்குக் கொண்டுவந்து தமது ஆதிக்கத்தைச் செலுத்துவது என்றகொள்கைதான் மதத்திலும், கடவுளிலும் காணக்கிடக்கின்றதேயன்றி வேறெவ்வித நல்ல கொள்கைகளையும் காணமுடியாது. மதம் மக்களை ஒன்று சேரவிடாது தடுத்தது, சமூகங்களிடையே பேதுவேஷத்தை உண்டுபண்ணியது, தேசத்தோடு தேசம் கடும் போர் புரியச்செய்து அதன் பயனாய் லட்சக்கணக்கான மக்களின் இரத்தம் சிந்தப்பட்டது. இத்தகைய காரியங்கள் தாம் இதுவரையில் நடைபெற்றிருக்கின்றனவேயொழிய ஒரு தனிமனிதனாகிலும் காப்பாற்றப்பட்டான், உதவிசெய்யப்பட்டான் என்று கூறும்படியாக மதம் இதுவரையில் மனிதனுக்கு உதவி செய்ததாக காணவில்லை. ஆகவே எதுவரையில் ஜன சமூகம் 'மதம்' வேண்டுமென்பவர்கள் கூற்றிற்கு ஆதரவளிக்கின்றதோ, அதுவரையில் ஜன சமூகம் மனிதப் பிராயத்தையடையவில்லை என்றுதான் சொல்லல் வேண்டும். மதம் வேறெதையும் செய்யவில்லையென்றாலும், மதத்தலைவர்களாகிய சாதாரண மனிதர்களை அற்புத ஆண்டவர்களாக்கி மக்களை மயக்கி, சோம்பேறிகளின் வாழ்க்கைக்கு ஆதாரமளித்து, அவர்கள் எண்ணிக்கையையும் பெருக்கி அடிமைகளாய் வாழும்படி செய்திருக்கின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது. மக்கள் வாழ்க்கையின் அடிப்படையை அரிக்கும் வேர்ப்புழுக்களாகத்தான் மதக்கொள்கைகளிருக்கின்றன. இத்தகைய மதத்தை வேண்டாமென்றோ, ஒழித்துவிட வேண்டுமென்றோ கூறுவதில் அதிக ஆட்சேபனைகள் கிளம்ப இடமில்லை. அதேத்தபடியாகக் கடவுளைப்பற்றி அறிந்தவர் இதுவரையிலும் எவருமிலர். மேலும் கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியே சோம்பேறிகளின் வேலையாய் முடிந்து விடும். ஏனெனில் பயனில்லா ஒன்று இருந்தாலென்ன? இல்லாமல் போனாலென்ன? ஆகையால் அதைப்பற்றி அதிகம் ஒன்றும் கூறவேண்டியதில்லை.

விடுதலை.

தோழர் காந்தியோ, காங்கிரசோ இன்னும் விடுதலை என்னும் வார்த்தைக்கு வியாக்யானம் கூறினார்களில்லை.

ஆனால் சுயமரியாதை இயக்கமோ விடுதலை என்னும் பதத்திற்கு விரிந்த பொருள் கூறுகின்றது. மனித அறிவு முதன்முதல் எப்பொழுது எதற்காக அடிமைப்படுத்தப்பட்டதோ அதிலிருந்து விடுதலைபடைதல் வேண்டுமென்றுதான் கூறுகின்றது. மனிதஸமூகத்திற்கு, முன்னேற்றத்திற்கு எவைகளெல்லாம் தடையாயிருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் ஒழித்து முன்னேறவேண்டுமென்னும் விருப்பமே சுதந்திரத்தன்மையென்று கூறுகின்றது. காங்கிரசோ சுதேச சமஸ்தானங்களுக்குப் பாதுகாப்பும் மதநடுநிலைமையும் அளிப்பதே விடுதலையின் நோக்கமென்று கூறுகின்றது. மதநடுநிலைமையும் சுதேச சமஸ்தானங்களுக்குப்பாதுகாப்பும் என்பது விடுதலையின் தன்மையென ஒரு சாரார் கூறுவார்களேயாயின், அவர்களை நாம் எப்படி ஆதரிக்க முடியும்? என்றுதான் கேட்கின்றேன்.

தீண்டாமை.

தீண்டாமையைப்பற்றி சதா சர்வ காலமும் காங்கிரஸ் பேசுகின்றது. ஆனால் நடத்தையில் ஒன்றையும் காண முடியவில்லை. தீண்டாமையொழியவேண்டுமாயின், வைதீகம் ஒழிய வேண்டாமா? தீண்டாமை வைதீகத்திலிருந்து உற்பவித்ததல்லவா? தீண்டாமை யொழியவேண்டுமாயின் அதன் உற்பவிதஸ்தானம் ஒழியவேண்டாமா? அஃதில்லாது வைதீகத்திற்குப் பாதுகாப்பளிப்பதாகக்கூறும் காங்கிரஸ் எப்படித்தீண்டாமையை யொழிக்கமுடியும்? தீண்டாமையொழியாதவரையில் சுயராஜியம் குதிரைக்கொம்பாகத்தான் முடியும்.

தொழிலாளர்.

பணக்காரருக்குப் பாதுகாப்பாம்! தொழிலாளர்களுக்கு உதவியாம்! தொழிலாளர்களுக்குப் பூரண உதவி செய்வதென்பது பணக்காரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதிலிருக்கிறதென்று கூறுவது விசேஷ புத்தியுடையவர்கள் கூற்றாகவிருக்க முடியாது. பணக்காரத்தன்மைக்குக் காருண்யம் பிறந்து தொழிலாளர்கள்நிலைமை உயரவேண்டுமென்று நினைப்பது பகற்கனவையே யொக்கும். பணக்காரத்தன்மை அழிந்தொழிந்தாலல்லாது ஏழைகளின்நிலைமை எப்பொழுதும் போலவேதானிருக்கமுடியும் ஆகையால் காங்கிரசின் நோக்கத்தை

அலசிப்பார்த்தால், பணக்காரரைக் கண்டால் காங்கிரஸ் நடுங்குகின்றது என்றுதான் கூறமுடியும்.

கதரும் மில்லும்.

இவை இரண்டில் எது சௌக்கியமான விலைக்குக்கிடைக்கின்றதோ, அதை அணிவதால்தான் ஏழைகள் தற்காலப்பொருளாதாரநிலைமையைச் சமாளிக்கமுடியுமென நாம் கருதுகின்றோம். ஆகையால்தான் கதரைவிட மில்துணிகளை ஆதரிப்பது நலமெனக்கூறுகின்றோம். மில் துணிகளையும் ஆதரித்து, கதரையும் போற்றி வருவதிலிருந்தே கதர் ஒழிந்துவிடுமென்பது விளங்கவில்லையா? இன்னும் சில காலங்களுக்குப்பின்னுல் எல்லோரும் செய்யப்போவதை சுயமரியாதை இயக்கம் இன்றே செய்து முடித்துவிடவேண்டுமென்று கூறுகின்றது. ஆகவே விதேலையின் பேரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கதர், மதுவிலக்கு என்னும்யுத்த சாதனங்கள் ஒருபோதும் நீடித்து நிற்கப்போவதில்லை என்று யுத்தம் நிறுத்தப்படுகின்றதோ, அன்றே இவைகளும் அழிக்கப்பட்டாய்விடுமென்பது திண்ணம்.

காந்தி நாடகம்.

ஆகவே இந்தியாவை ஓர் நாடக மேடையாக்கி தோழர் காந்தி அவர்கள் கதாநாயகனாய் சாத்வீக வேடந்தாங்கி, கதர், மதுவிலக்கு, சத்தியாக்கிரகம் என்னும் பாட்டுகளைப்பாடி வைதீகத்திரைமறைவில் நின்று கொண்டு விடுதலை நாடகம் நடிக்கின்றார். இந்தப்பொறுத்தமற்ற வேடத்தைக் கண்டு இந்நாட்டு மக்கள் மயங்கி கைகொட்டி ஆரவாரம் செய்து காந்திக்கு ஜே போட ஆரம்பித்துவிட்டனர். இதுதான் காங்கிரசின் இன்றையநிலைமை.

காங்கிரஸ் தலைவர்கள்.

காங்கிரசின் இன்றைய தலைவர்களைப்பற்றியும் சில வார்த்தைகள் கூறவேண்டுமேயாயின் தோழர் காந்தியவர்களை மதவாத கோஷ்டியில் சேர்த்துவிடலாம். பண்டித மாளவியாவை வைதீகரல்லவென நான் சொன்னுலும் நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். இவ்வாண்டின் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகிய சர்தார் படேல் அவர்களைப் பற்றி அறியவேண்டுமானுல், அவரது பெங்களூர் பிரசங்கமே போதுமானது. இனித்தமிழ் நாட்டின்ஒப்பற்ற தலைவராகிய இராஜகோபாலாச்சாரியாரைப்பற்றி அதிகம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. சேர்மாதேவிக் குருகுலப் போராட்டக்காலத்தை ஞாபகப்படுத்திப் பார்த்தீர்களேயாயின் உண்மை விளங்கிவிடும். தமிழ் நாட்டின் இவ்வாண்டு மாகாண காங்கிரஸ் கமிட்டியின்தலைவராகிய நமது நண்பர் சத்தியமூர்த்தி அவர்களாய் விட்டபடியால் அவர்களைப்பற்றி என்னைவிட உங்களுக்கே அதிகம் தெரிந்திருக்கும். இத்தலைவர்கள் தலைமையின் கீழ் வரப்போகும் சுயராஜியம் எத்தகையதாகவிருக்குமென்பதை நீங்களே யோசித்து முடிவிற்கு வருவீர்களென நம்புகின்றேன்.

நமது போர்.

தோழர்களே! நாம் நடத்தும் போராட்டம் காங்கிரசை எதிர்ப்பதல்ல, பார்ப்பனரைத் துவேஷிப்பதல்ல, கவர்ன்மெண்டைத்தாக்குவதல்லபணக்காரர்களை இழித்துக்கூறுவதல்ல. வைதீகத்தின் ஜீவ நாடிக்கும் பகுத்தறிவின் ஜுவாலைக்கும் நடக்குமோர் போராட்டமாகும். என்றிருந்தாலும், எவர் எதிர்த்தாலும், எவர் மறுத்தாலும், எவர் இருந்தாலும், இறந்தாலும் பகுத்தறிவின் ஜுவாலையின் முன்பு வைதீகமழிக்கப்பட்டுத்தான் தீருமென்பது மறுக்க முடியாத உண்மையேயாகும். ஆனால் இத்தகைய ஜுவாலையின் முன்பாக காங்கிரசாயினும் சரி, பணக்காரத்தன்மையாயினும்சரி எந்த சர்க்காராயினும் சரி, நியாயமற்ற முறையில் வந்து குறுக்கிடுமேயாயின், அவைகளுடைய கதியும், வைதீகத்துடன் சேர்ந்தழியவேண்டியதுதான். நமது நண்பர்கள் சிலர் காங்கிரசையும், அதன் ஆர்ப்பாட்டங்களையும் கண்டு நடுங்கி விடுகின்றனர். செல்வாக்கும், ஆதரவும் தான் ஓர் இயக்கத்தின் ஜீவநாடிகளெனக்கருதுகின்றனரே யொழிய அச்செல்வாக்கும் ஆதரவும் நீடிக்கக் கூடியதான கொள்கைகளையுடையதாக விருக்கின்றதாவென்பதை நிதானத்துடன் கவனிக்க மறந்து விடுகின்றனர்.

தொண்டர்கள் நிலைமை.

இனித்தொண்டர்கள் நிலைமையைப்பற்றிச் சில, வார்த்தைகள் கூறலாமெனக்கருதுகின்றேன். எனக்குத்தொண்டர்கள் கூட்டத்தில் போதுமான அனுபோகமுண்டென்பதையும் நானும் தொண்டர்களில் ஒருவன் என்பதையும் நீங்கள் மறக்க முடியாது. இவ்வியக்கத்தொண்டர்கள் அதிகக்கஷ்டநஷ்டங்களுக்குள்ளாகியிருக்கின்றனர். தொண்டர்களின் வித்தியாசம் பாராட்டப்படுவதில்லை. தொண்டர்களுக்குள் எப்பொழுதும் அபிப்பிராய பேதமே ஏற்பட்டதில்லை. இனியும் ஏற்படப்போவதில்லை. ஊதியத்தை எதிர்பார்த்து இதுவரையில் எவரும் தொண்டாற்றியதும் கிடையாது. தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் அபிப்பிராய பேதங்களேற்படுவதுண்டு. ஆனால் அவைகளெல்லாம் சமயத்தில் பறந்தோடிப்போவதுமுண்டு. வெளிப்படையான போராட்டங்கள் எதையும் நடத்துவதற்குத் தொண்டர்கள் ஒருபோதும் தயாரானதில்லை நமதியக்கத்தலைவர்களும் சில சமயங்களில் பொறுமையை இழந்து நடந்திருக்கின்றனர். ஆனால் அது நீடித்திருந்ததில்லை. இத்தகைய நிலைமையில்தான் இதுவரையில்தொண்டர்களென்பவர்களும்தலைவர்களென்போரும் தொண்டாற்றி வந்திருக்கின்றனர். இனியும் தொண்டர்கள் தங்களுக்குள் போதிய கட்டுப்பாட்டுடனும், ஒழுங்குடனும் நடந்து கொள்ளுவார்கள் என்பதற்கு என்னால் உறுதி கூறமுடியும். விருதுநகர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்து அவைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை ஏகமனதுடன் தீர்மானித்து நமது நாடு நம்மை நம்புமாறு வெற்றிபடை வீரர்களென நான் நம்புகின்றேன். எனது வந்தனத்தை மீண்டுமொருமுறை உங்களுக்குக் கூறுவதுடன் எனது பிரசங்கத்தையும் முடிக்கிறேன்.

நான் ஒரு ஸனாதன ஹிந்து.

திரு. காந்தி எழுதுவது.

நான் ஒரு 'ஸனாதன ஹிந்து'. கீழ்கண்ட காரணங்களால் தான் நான் என்னை ஸனாதன ஹிந்துவென அழைத்துக்கொள்ளுகிறேன்:—

1. வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய ஹிந்து தர்ம சாஸ்திரங்களிலும், பகவானின் அவதாரங்களிலும், மறுபிறப்பிலும் எனக்கு நம்பிக்கையுண்டு.

2. வருணாச்சிரம தர்மத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு; வேதங்களில் சொல்லியுள்ள வருணாச்சிரம தர்மத்தையே நான் கொண்டாடுகிறேன்.

3. விக்கிரக ஆராதனையில் எனக்கு நம்பிக்கையுண்டு.

திரு. காந்தி. 5-9-31உ "சு—ச."

ஈரோட்டில் சுயமரியாதைத் திருமணம்.

ஈரோடு சுயமரியாதை மோட்டார் சர்விஸ் திரு. கோவிந்தசாமி அவர்கள் சகோதரர் திரு. ஜகதீசன் அவர்களுக்கும், ஈரோடு சுயமரியாதை ஒட்டல் திரு. சின்னுசாமி அவர்கள் சகோதரர் குமாரத்தி திருமதி சென்னம்மாள் அவர்களுக்கும் உயர்திரு .எஸ். இராமநாதன் அவர்கள் தலைமையில் 9-9-31ந் தேதி காலை 9மணிக்கு ஈரோட்டில் சுயமரியாதைத் திருமணம் நடந்தேறியது.

திருமணத்தில் எவ்வித சடங்குகளுமில்லாமல் மணமக்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் ஒப்பந்தங்களை வெளிப்படுத்தியதும் மாலைமாற்றி தாலிகட்டப்பட்டதும் தலைவர் திருமணத்தைப்பற்றி சில வார்த்தைகள் பேசியபின், திரு.ஈ.வெ. இராமசாமி ஆண்-பெண் சமசுதந்திரம் என்பதை விளக்கி, தாலி கட்டியதைக்கண்டித்து அதுவும் ஒரு சடங்கு அல்லது பெண் அடிமைக்கு அறிகுறி என்று எடுத்துக்காட்டியபின் கற்கண்டு சந்தன தாம்பூலம் வழங்கி, சாப்பாடு நடந்ததும் திருமண நிகழ்ச்சி முடிவு பெற்றது. திருமணத்திற்குப்பல பெரியார்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

M. A., L. T. உபாத்தியாரின் கடவுள் பாடம்.

உபாத்தியாயர்:— பெட்டியை தச்சன் செய்தான்; வீட்டை கொத்தன் கட்டினான்; சாப்பாட்டை சமையற்காரன் சமைத்தான், உலகத்தைக்கடவுள் உண்டாக்கினார். தெரியமா?

மாணக்கன்:—தெரிந்தது சார். ஆனால், ஒரு சந்தேகம் சார்.

உபா:- என்ன சொல்?

மா:- அப்படியானால், கடவுளை யார் உண்டாக்கினார் சார்?

உபா:-முட்டாள்! இந்தக்கேள்வியை உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது? அவர் தானாகவே உண்டானார். இனிமேல் இப்படியெல்லாம் கேட்காதே.

மா:-ஏன் சார்? கேட்டால் என்ன சார்?

உபா:-அது! நிரம்பவும்பாவம்.

மா:- பாவம் என்றால் என்ன சார்?

உபா:-சீ! வாயைமூடு. நீ அயோக்கியன். 'குடிஅரசு' படிக்கிறாயோ? ஏறு பெஞ்சிமேல்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

ஈரோடு 1931 செப்டம்பர் 13௳

இந்தியாவின் பொருள் நஷ்டத்திற்கு காரணம்.

இந்தியநாடு எவ்வித மானவளத்திலும் மற்ற நாடுகளை விட இளைத்ததல்ல என்பதும், இந்தியாவில் இராஜாக்கள் ஜமீன்தாரர்கள் முதலிய செல்வவான்களும், மற்றும் அவர்களுக்குச் சமானமான மடாதிபதிகள், ஆச்சாரிய பீடங்கள், கோடீஸ்வரர்கள் ஆகியவர்களும் ஆனபிரபுக்கள் மற்றநாடுகளுக்குஇளைக்காத அளவில் தாராளமாய் இருந்து வருகின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்தஉண்மையாகும். அதுபோலவே வியாபாரிகளும், வியாபாரப்பொருள்களும் கூட மற்ற நாடுகளைப்போலவேதான் இங்கு இருந்துவருகின்றன.

விவசாயத்துறையிலும் ஏராளமானபூமிகள் இருப்பதும், அவற்றிற்குஅனுகூலமான இயற்கைநீர்பாசான வசதிகள் இருப்பதும், ஒவ்வொரு மிராசுதாரர்கள் 1000 ஏக்ரா, பதினாயிரம் ஏக்ரா, சிலர் லக்ஷம் ஏக்ரா-பூமிகளையும் உடையவர்களாக இருப்பதும், விவசாயம் செய்யப்படவேண்டிய பூமிகள் இன்னும் எவ்வளவோ இருப்பதுமான நாடாகவும் இருப்பதின்மூலம் விவசாயத்துறையிலும் இந்தியா மற்றநாடுகளுக்கு இளைக்காததாகவே இருந்து வருகின்றது.

இப்படிப்பட்ட பல்வளமும் பொருந்திய இந்தியநாடு ஏன் தரித்திரமான நாடு என்றும், அடிமையான நாடுஎன்றும், ஏழைகள் பெருத்த நாடு என்றும் சொல்லப்பட்டு வருகின்றது என்பதை தேசமுற்போக்கில்கவலை கொண்டவர்கள் யோசிக்கத்தக்கதேயாகும்.

முதலாவது, இந்தியாவின் மேல்கண்ட வளமுள்ள செல்வம் எல்லாமக்களும் அடையத்தக்க மாதிரியான சமூக அமைப்பு இல்லாமல் செல்வங்கள் சில வகுப்பு மக்களுக்கே உரியதாகவும் அனுபவிக்கத் தக்கதாகவுமான சமூக அமைப்பு முக்கியமான காரணமாகும்.

அதாவது, வருணாச்சிரம தருமப்படி இன்ன இன்ன வகுப்புக்கு இன்ன இன்ன தொழில்-இன்ன இன்ன உரிமை என்பதான திட்டமே நாட்டின் செல்வம் எல்லோருக்கும் பரவுவதற்தில்லாமல் தடைப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இரண்டாவது, ஒரு வகுப்பு மக்கள் அதாவது 100க்கு 90 பேர்களுக்கு மேலாகக்கொண்ட சமூக மக்கள் அவர்களது வயிற்றுக்குப் போதுமான அளவுக்கு மேல் பெற முடியாத நிபந்தனைக்குள்ளாக்கி வைக்கப்பட்டதுடன், அவர்கள் கையில் தங்கள் வயிற்றுக்கு வேண்டிய ஆகாரத்தின் அளவுக்கு மேற்பட்ட எந்தப் பொருளையும் வைத்திருக்க உரிமையில்லாதவர்களாக்கப் பட்டிருக்கின்றது என்பது இரண்டாவது காரணமாகும். இந்த உண்மைக்கு ஆதாரம் மனுதர்ம சாஸ்திரத்தில் நன்றுய்க் காணலாம்.

அதாவது, "சூத்திரன்பொருள் சேர்த்து வைத்திருந்தால் பிராமணனுக்கு ஆபத்தாக முடியும்';

"சூத்திரன் பொருள் வைத்திருந்தால் பிராமணன் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ளலாம்—"

"சூத்திரன் பொருளை பிராமணன் எப்படிவேண்டுமானாலும் கொள்ளை அடிக்கலாம்."

"அடிமையான சூத்திரன் பொருள் வைத்திருக்க உரிமை உடையவனல்ல" என்கின்ற அனேக ஆதாரம் இந்து மத தர்ம சாஸ்திரங்களில் இருக்கின்றன. (இங்கு சூத்திரன் என்பதற்கு பொருள் தொழிலாளிகள் என்பதே யாகும்.)

இந்த மாதிரியான திட்டங்களை ஏற்படுத்த ஆதாரமாயிருந்தது வருணாச்சிரம தர்மமேயாகும்.

வெள்ளைக்கார அரசாங்கத்தின் பயனாய் இந்த தர்மங்கள் சிறிது சிறிது மாற்றமடைந்து ஏதோ 100ல் ஒருவர் ஆயிரத்தில் ஒருவர் செல்வ வான்கள் ஆகவும் வருணமுறைதவறி பணம் சம்பாதிக்க உரிமை உடையவர்களானாலும் கூட அந்தப் பணமானது மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் அதாவது 'சூத்திரன் செல்வத்தை பிராமணன் எந்த விதத்திலானாலும் கொள்ளை கொள்ளலாம்" என்கின்ற தர்மப்படி 'சூத்திரன்'செல்வத்தை கொள்ளை கொள்ளவே ஸ்தலம், கோவில், குளம், புண்ணியம், பாவம், சடங்கு முதலிய காரியங்களின் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு விடுகின்றன.

இந்தக்காரணத்தாலேயே 'சூத்திரர்கள்' என்கிற வகுப்பினரில் 100-க்கு 75 பேர்கள் கடன்காரர்களாகவே இருக்க நேரிட்டு இருக்கின்றது.

இவை ஒருபுற மிருந்தாலும், இன்று பொருளாதாரக் கஷ்டத்தையே பெரும்பாலும் எடுத்துச் சொல்லி அதை நிவர்த்திப்பதற்காக இந்தியாவுக்கு சுயராஜியம் வாங்கித்தருகின்றதாய்ச் சொல்லும் அரசியல் தலைவர் திரு காந்தி அவர்களும் இந்த வருணாச்சிரம முறையை அடிப்படையாகக்கொண்டதான சுயராஜியமேதான் வேண்டும் என்று சொல்லி அதற்காகவே பாடுபட்டுவருகின்றார்.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் அவர் அவ்வப்போது பேசியிருக்கும் பேச்சுகளும் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களுமே போதுமானதாகும்.

முதலாவது திரு .காந்தி அவர்கள் தன்னை ஒரு வருணாச்சிரம தர்மி என்றும், இந்தியாவில் வருணாச்சிரம தர்மம் குறைந்ததாலேயே அன்னிய ஆக்ஷி ஏற்பட்டதென்றும், அதனால் வருணாச்சிரம தர்ம ஆக்ஷியை ஏற்படுத்தவே தான் பாடுபடுவதாகவும் பல தடவைகளில் தாராளமாய் வெளிப்படையாய் எடுத்துச் சொல்லி இருக்கிறார். அந்தப்படியே சொல்லியும் வருகின்றார்.

ஆனால், இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு மயக்கம் ஏற்படலாம், அது என்ன வென்றால், திரு. காந்தியவர்கள் வருணாச்சிரம தர்மத்தைப்பற்றிப் பேசும் போது தனது 'வருணாச்சிரம தர்மம் வேறு' என்று சொல்லி வருகின்றதால் அது வேறாயிருக்கலாம் என்று கருதி இருக்கலாம். அது எப்படியிருந்தபோதிலும் அதாவது ஜாதி உயர்வு, தாழ்வு சம்பந்தமான காரியம் எப்படியிருந்தபோதிலும், வித்தியாசம் இருக்கவேண்டும் என்பதிலும், அவனவனுடைய பாம்பரைத் தொழிலையே அவனவன் செய்யவேண்டுமென்பதிலும், அவர் சந்தேகத்திற்கு இடம் இருக்கும் படியாகக்கூடப் பேசாமல் தெளிவாகவே ஜாதிபாகுபாடுகளும் சுதர்மமும் (அதாவது அவனவன் குலத்தொழிலும்) கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்றே சொல்லுகின்றார். (இது அவர் எழுதியிருக்கும் பகவத்கீதை மொழி பெயர்ப்பில்கூட இருக்கின்றது. 18ம் அத்தியாயம் 41 முதல் 48 வரை உள்ள சுலோகங்கள்.)

இவை ஒருபக்கம் இருந்தபோதிலும் சமீபத்தில் அவர் பரோடா சமஸ்தானத்தில்பேசிய போதும்இந்தக்கருத்தையே வற்புறுத்திப் பேசிக் காட்டியிருக்கின்றார்.

அதாவது, "கிராம வாசிகள் செருப்புத்தைத்தல், ஆடு, மாடு மேய்த்தல் முதலிய தொழில்களைச் செய்யவேண்டும், அவர்கள் பெட்டிகளில் அதிகப்பணம் வைத்திருக்கக்கூடாது. அவர்கள் பம்பாய் வியாபாரிகளைப் போல் (வைசியர்களைப்போல்) பணக்காரர்களாக இருக்க நினைக்கக் கூடாது" என்று பேசி இருக்கின்றார். ஆகவே இப்போதுதிரு காந்தியவர்களால் கேட்கப்படும் சுயராஜியம் என்பது இந்திய மக்களின் பொருளாதார நிலைமையை எப்படி முன்னுக்கு கொண்டுவரக்கூடியதாகும்? என்பது யோசிக்கத்தக்கது.

நிற்க, நமது நாட்டு மக்களின் பொருளாதார நிலைமை மோசமாயிருப்பதற்கு மற்றும்சில காரணங்களும் உண்டு.

அதாவது நமது ஜனங்களின் மததத்துவமே இவ்வுலகவாழ்க்கை 'பொய்'என்பதும் 'மாய்கை' என்பதும்செல்வத்தைமோட்சத்தில் இடம் பிடித்து வைக்கவும், அடுத்த ஜன்மத்தில் நல்ல பிறவியாய் பிறக்க ஏற்பாடு செய்து கொள்ளவும் செலவழிக்க வேண்டும் என்கின்றதான எண்ணங்கள் செல்வங்களைப் பாழாக்கி விடுகின்றன. அன்றியும் பாடுபடுகின்ற மக்களுக்கு தங்கள் மதக்கடமை, ஜாதிக்கடமை என்பதுமாத்திரமல்லாமல் முன் 'ஜன்மகர்மத்தின்' பயன் என்றும் எண்ணும் எண்ணங்களையேபுகுத்தப்பட்டு தங்கள் கஷ்டங்களையும்தரித்திர நிலைமையையும் உணராமல்இருந்து வருகின்ற குணமும்தகுந்த பயனை அடையமுடியாமல் செய்துவிடுகின்றன. இவை தவிர நமது நாட்டு தர்மஸ்தாபனங்கள் ஏராளமான செல்வங்களை தன்னுடைய தாக்கிக்கொண்டு அவைகள் மக்களுக்குப் பயன்படாமல் வீணாக்கப்படுகின்றன.

சாதாரணமாக சென்னை மாகாணத்தின் சர்க்காரார்வரிஎவ்வளவு ரூபாய் இருக்குமோ, அதில் 4-ல் ஒரு பங்குக்குக்குறையாமல் இம்மாகாணத்தில் வரும்படி வரத்தக்க சொத்துக்கள் தர்மஸ்தாபனங்களாய் இருக்கின்றன. அவற்றின் மற்ற செலவுகளுக்கு என்று நமது மக்களால் செய்யப்படும்

செலவுகளின் மொத்தம் நாம் செலுத்தும் வரித் தொகைக்குக் குறைபாடதென்றே சொல்லலாம். இவை இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படாததோடுவீண் செலவினமாகவே ஏற்பட்டு விடுகின்றன.

அன்றியும் தர்ம ஸ்தாபனங்களில் வரும்படி இல்லாமல் வெறும் முடக்கமாய் இருக்கும் சொத்துக்கள் தங்கம், வெள்ளி, கல் நகைகள், இடங்கள் முதலியன கோடிக்கணக்கான ரூபாய் வரும்படி வரக்கூடிய அளவு உள்ள சொத்துக்கள் யாதொரு பிரயோஜனமும் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றது.

இவை ஒருபுறமிருக்க இராஜாக்கள் என்றும், ஜமீன்தாரர்கள் என்றும் ஏற்பட்டக்கூட்டங்கள் அனுபவிக்கும் பொருள்கள், மற்றும் அவர்கள் நகை, ரொக்கஷ், புதைத்து வைத்திருப்பது முதலிய செல்வங்களின் அளவு நூற்றுக்கணக்கான கோடி என்றே சொல்லலாம்.

இவ்வளவும் தவிர இந்திய மக்களின் வருமானம் என்பதோ அவர்கள் தங்களது தொழில் முறைகளை சிறிதும் மாற்றிக்கொள்ளாததால் பிரயாசை அதிகமும், சாமான் யோக்கியதை குறைவும், உற்பத்திக்குறைவும் இதனால் வரும்படிக்குறைந்ததுமாக இருப்பதுடன் மனிதனுடையதேவைக்கும் போகபோக்கியங்களுக்கும் வேண்டியவைகளுக்கெல்லாம் ஏழை முதல் செல்வவான், மகாராஜாக்கள் வரை வெளி நாட்டுப்பொருள்களையே உபயோகிக்க வேண்டியவர்களாகி அதன் மூலம் செல்வம் ஏராளமாய் வெளியில் போய் விடுவதால் ஒருவித நஷ்டத்தை அடையவேண்டியதாக ஏற்பட்டு விடுகின்றது.

ஆகவே, இத்யாதி காரணங்களால் நாட்டின் பெரும் பாகமான மக்கள் ஏழைகளாக—தரித்திரர்களாக இருக்கக்கடமைப் பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

பொருளாதாரத் துறையில் இந்திய நாடு முற்போக்கடைய வேண்டுமானால், அதன் அஸ்திவாரமானகாரணங்களையெல்லாம் கவனிக்காமல் மக்களுடைய மதியீனத்தையும், பகுத்தறிவற்ற தன்மையையும் ஆதாரவாய்உபயோகித்துக்கொண்டு வெளி நாட்டுத் துணியை மறியல் செய்வதாலும், சுதரை வாங்கிக்கட்டுவதாலும் கள்ளுக் கடைகளை மூடிவிடுவதாலும் பொருளாதாரத் துறையை சரிப்படுத்திவிடலாம் என்று சொல்லுவது ஒருநாளும் நாணயமானதோ, அறிவுடைமை யானதோ, காரியத்தில் பயன் கொடுக்கக் கூடியதோ என்பதாகச் சொல்லி விட முடியாது.

இந்தியாவின் பொருளாதாரத் துறை சீர்படுவதற்கு முதலாவது வருணாச்சிரம முறை ஒழியவேண்டும். இரண்டாவது, மத சம்பந்தமான எண்ணங்கள் அகற்றப்படவேண்டும். மூன்றாவது, கோவில், குளம், சடங்கு, சாத்தான், சனிவிலக்கு ஆகிய எண்ணங்கள் அழிக்கப்படவேண்டும். பிறகு அரசன், ஜமீன்தாரன் முதலிய தத்துவங்கள் அழிக்கப்பட்டாகவேண்டும்.

இவைகளையெல்லாம் மறைத்து வைத்துக்கொண்டு—இந்தத் துறைகளில் எல்லாம் புகுந்து அழிக்கு வேலை செய்யாமல் இருந்துகொண்டு இருப்பதுடன், வருணாச்சிரம தர்மத்தையும், புராணமரியாதையையும் பலப்படுத்திக்கொண்டு பொருளாதாரத் துறை சீர்படுத்துவதற்குச்சீமைக்குப்போய் "வெள்ளைக்காரனிடம் வியாபாரம் பேசப்போகின்றேன்," என்று சொல்லுவது அடியோடு அர்த்தமற்றதும், நாணயமற்றதுமாகுமா? அல்லது இல்லையா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு பெண்ணுக்கு பல புருஷர்கள்.

இந்தியாவில் ஒரு புருஷனுக்கு பல பெண்ஜாதிகள் இருந்து வருவது சாதாரணமாகவும், அவ்வழக்கம் சமூகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும், மதத்துடனும் மதசம்பந்தமான கடவுள்கள், மதாச்சாரியார் முதலியவர்களுக்குள்ளும் இருந்து வருவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால், ஒருவித சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம், அதுவும் வெள்ளைக்கார தேசத்தை, அவர்களது நாகரீகத்தைப் பின்பற்றியவர்கள் என்கின்ற முறையில் சிலர் ஒரு புருஷனுக்கு ஒன்றுக்கு மேல்பட்ட பெண்கள் கூடாது என்று சொல்லுவார்கள். அதற்குக் காரணம் சொல்லவும் தெரியாது. இரண்டு பெண்டாட்டிகள்கட்டின மதாச்சாரியாரை வணங்குவார்கள். இரண்டு பெண்டாட்டி கட்டின சாமியையும் கும்பிடுவார்கள். அதற்கு, கோயில்கட்டி, இரண்டு பெண்டாட்டிகளைவைத்துக்கும்பாபிஷேகம் செய்து, பூசை உற்சவமும் செய்வார்கள். தாங்களும்பல பெண்களிடம் சாவகாசமும் செய்திருப்பார்கள். தங்கள் காதலிகளாக. பயன் படுத்தியும் வருவார்கள் ஆனால் வாயில் மாத்திரம் இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக்கொள்வதுசீர்திருத்தத்திற்கு- கொள்கைக்கு விரோதம் என்பார்கள். ஆகவே இக்கூட்டத்தார் சீர்திருத்தம் என்பதற்கு அர்த்தம் தெரியாதவர்களும், அதில் பொறுப்பும், கவலையும் இல்லாதவர்களும் ஆனவர்கள் என்று சொல்லப்படவேண்டியதோடு, வெள்ளைக்கார நாகரீகத்தைத்தாங்களும்வாயினால் பேசுவதின் மூலம் தங்களை "நாகரீகக்காரர்" என்றுபிறத்தியார் சொல்லவேண்டும் என்கின்ற ஆசையையும் உடையவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே இதன் நன்மை தீமை என்பது எப்படி இருந்தாலும், ஒரு மனிதனுக்கு உள்ள சுதந்திரம் ஒரு மனுஷிக்கும் இருக்கவேண்டியது என்கின்ற முறையில் பார்க்கும் போது நமது புருஷர்கள் இரண்டுபெண்டாட்டிகளுடன்வாழுவது போலவே நமது பெண்கள் இரண்டு புருஷர்களுடன் வாழுவதில் குற்றமில்லை என்பதே நமதபிப்பிராயம் என்பதோடு, அம்முறையை இஷ்டப்படுபவர்கள் கைபாளுவதில் எவ்விதத்தடையும் இருக்கக்கூடாதென்பதும் நமதபிப்பிராயமாகும். புருஷன் பெண்சாதியாக வாழுவது என்பது, புருஷன் பெண்சாதி என்பவர்களுடைய தனித்தனி சொந்த இஷ்டத்தைப் பொறுத்ததே தவிர, அதில் ஆதிக்கம் செலுத்த வேறு யாருக்கும் உரிமை இல்லை என்பதே அவ்விஷயத்தில் நமது அபிப்பிராயமாகும். இந்து மத ஆதாரங்களில் இவ்வழக்கம் இருந்து வந்ததாக எழுதப்பட்டிருப்பது ஒரு புறமிருந்தாலும், மலையாளப்பிரதேசத்தில் இவ்வழக்கம் இன்று பிரத்தியக்ஷத்தில் இருந்து வருவதைக் காணலாம். அதாவது, ஒரு வீட்டில் 2, 3 புருஷர்கள் இருந்தால் அவர்கள் 2, 3 பேருக்கும் ஒரு பெண்ணையேமனைவியாகக்கொண்டு வாழ்க்கை நடத்தி வரப்படுகின்றது. இதுதவிர இந்தியாவின் வடகிழக்கில் உள்ள திபேத்து என்கின்ற நாட்டில் இன்றும் பெண்மக்களில் அவ்வழக்கம் தாராளமாய் இருந்து வருகின்றது. ஒரு பெண்ணுக்கு நான்கு ஐந்து புருஷர்கள் கணவர்களாக இருந்துவருகின்றார்கள். இதனால்சிறிதும்சண்டைசச்சரவின்றி சந்தோஷமாகவே வாழ்ந்து வருகின்றார்கள். இப்படியிருக்கின்ற இந்த ஜனங்களிடம்மிகநல்ல குணங்களும்,நாணயங்களும் இருந்து வருகின்றதாம். இதைதிபேத்துக்குஇரண்டு தடவை பிரயாணம்செய்து நேரிலேயேசென்று பார்த்து விட்டுவந்தஒரு பிரஞ்சு மாதாகிய திருமதி லா ப்பூஜீ என்கின்ற ஒரு அம்மையார் இதைப்பற்றி வியக்தமாக எழுதுகிறார். (இந்த விபரம் 9—9—31-தேதி "நவ சக்தி" யில் காணலாம்.)

ஆகவே, நமது மக்களுக்குள் வாழ்க்கை முறையோ, சீர்திருத்தமோ, முற்போக்கோ என்பவைகளைப்பற்றி சுதந்திர உணர்ச்சியோ—சுதந்திர அபிப்பிராய மென்பதோ அநேகருக்கு இல்லையென்றுதான் சொல்லவேண்டும். எந்தப்பழக்கவழக்கம் சீர்திருத்தம் என்றாலும் நம்நாடு--நம்மதம்--நம்ஜாதி--நம் வகுப்பு ஆகியவைகளில் என்ன இருக்கின்றது? எப்படி நடந்து வருகின்றது? என்கின்ற அளவில் தான் அவரவர் புத்தியைச்செலுத்த அருகதை உள்ளவர்களாயிருக்கின்றார்களே தவிர, உலகத்தில் மற்ற பாகங்களில் எப்படி இருந்தது?-எப்படியிருக்கின்றது? என்பவைகளைப்பற்றி கவனிப்பதோ, அல்லது இவ்விஷயங்களின் தன்மை என்ன? இதன் காரணமென்ன? நமது அறிவுக்கு எப்படிப்படுகின்றது? இப்படியிருந்தால் என்ன? என்பதுபோன்ற சுதந்திர அறிவோ, ஆராய்ச்சியோ கிடையவேகிடையாது என்று தான் சொல்லவேண்டியிருக்கின்றது. இந்தக்காரணமேதான் உலகத்தில் முற்போக்கும், சுதந்திரமும், விடுதலையும், இந்திய நாட்டிற்கு மாத்திரம் தடைப்பட்டிருக்கின்றது என்று சொல்லவேண்டியும் இருக்கின்றது.

ஆகவே, எந்தக்காரியத்தையும் ஆராய்ந்து பார்த்து அனுபவ குண தோஷம் கண்டு, மனதின் சுதந்திரத்தைமறுக்காமல், அடக்காமல், சுயேச்சையாய் நடக்கவேண்டியது தான் மனித தர்மம் என்றும், அந்தப்படிஉலகமே சுயேச்சையாயிருக்க சௌகரியம் இருப்பதுதான் மனித சமூகவிடுதலை என்றும் சொல்லுகின்றோம்.

சி. இராஜகோபாலாச்சாரியாரின் ஜாதிப்பிரசாரம்.

உயர் திரு சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் செப்டம்பர் 10-தேதி 'இந்து' பத்திரிகையில் ஜாதிக்கட்டுப்பாட்டின் மூலமது விலக்கு செய்வதை ச

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தானம் எழுதும் முறையில், ஒவ்வொரு ஜாதிக்கும், கிளை ஜாதிகளுக்கும் தம் தம் ஜாதியினரை ஜாதிப்பஞ்சாயத்து மூலம் அடக்கியாளுவதை ஆதரித்து எழுதியிருக்கிறார். உண்பது, பருகுவது, மற்றும் நடை உடை பாவனைகள் முதலிய விஷயங்களில் ஒவ்வொரு ஜாதியாரும் அந்த ஜாதியில் பிறந்த மக்களை கட்டாயப்படுத்த உரிமையுண்டு என்று கூறுகிறார். ஜாதிக்கட்டுப்பாட்டை மீறுகிறவர்களை ஜாதிப்பிரஷ்டம் மூலமும், வேலையிலிருந்து நீக்குவதன் மூலமும் தண்டிப்பது நியாயமென்றும் வற்புறுத்துகிறார். மேற்கண்ட கூற்றைஊன்றி கவனிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். "காங்கிரஸ் வருணாச்சிரமத்தை வளர்க்க ஏற்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபன"மென்று நாம் கூறிவருவதை மறுக்கும் அன்பர்கள் திரு இராஜகோபாலாச்சாரியார் கூற்றில் பதிந்திருக்கும் கொள்கையை அலசிப்பார்க்கவேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தேசியமும், மதுவிலக்கும் வெறும் போர்வைகளென்றும், வருணாசிரம பாதுகாப்பே காங்கிரசின் ஆணித்தரமான நோக்கமென்பதும் இப்பொழுதாவது பொது ஜனங்கள் கண்டு கொள்வார்களென்று நம்புகிறோம். வகுப்புவாதம் கூடாதென்றும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கூடாதென்றும் முறையடிப்பவர்கள் ஜாதிப்பஞ்சாயத்துகள் மூலம் பலவந்தத்தை உபயோகிக்க வேண்டுமென்று கூறுவதில் ஏதாவது நாணயமுண்டா? ஜாதிக்கட்டுப்பாட்டைவிடஜாதிகளுக்கு ஆதிக்கம்தேட இதைவிட சிறந்த முறைகள் வேறு ஏதாவது உண்டா? தீண்டாமைவிலக்கிற்கும், விதவைகள் துயரத்திற்கும், பெண்ணடிமைக்கும், பொருளாதாரக்கஷ்டத்திற்கும் எந்த (ஆதாவது ஜாதி வகுப்பு) முறையை நாம் காரணமாகச்சொல்லி அதை அழிக்கவேண்டுமென்று கருதுகின்றோமோ அதைக்காப்பாற்ற வேண்டும் என்பதும், அதன்மூலம்செய்யப்படும்கொடுமையாலும்,பலாத்காரத்தாலும் ஜாதிக்கு ஆதிக்கம் தேடவேண்டுமென்பதும் திரு ஆச்சாரியார் கொள்கை என்பது புலப்படுகின்றதா? அல்லதுஇல்லையா? 'என்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஈரோட்டில் சுயமரியாதைத் தொண்டர்கள் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்.

16-9-31 தேதி புதன்கிழமை காலையிலும், அடுத்தநாள் வியாழக்கிழமையிலும் ஈரோடு திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் வீட்டில் தமிழ் நாடு சுயமரியாதைத்தொண்டர் நிர்வாகக்கமிட்டிக்கூட்டமும், பிரசாரக்கமிட்டிக் கூட்டமும் நடைபெறும்.

அது சமயம் ஒரு வேலைத்திட்டம்ஏற்படுத்தவும், பிரசாரமுறை திட்டம் ஏற்படுத்தவுமான காரியங்கள் யோசிக்கப்படும்.

கமிட்டி அங்கத்தினர்கள் திருவாளர்கள் சி நடராஜன், அ. பொன்னம்பலனார், எஸ். வி. லிங்கம், என், பி. காளியப்பன் முதலியவர்களும் திரு. எஸ். இராமநாதன் அவர்களும் ஈரோட்டில் இருக்கிறார்கள்.

எஸ். வி. லிங்கம்,
கூட்டுக்காரியதரிசி.

நீலாவதி பிரசவம்.

10-9-31 தேதி இரவு 1.35 மணிக்கு திருமதி நீலாவதி அம்மையாருக்குஒரு பெண்குழந்தை பிறந்திருக்கிறது. தாயும், சேயும் சௌக்கியமாகவிருக்கிறார்கள் என்பதாக சேதி கிடைத்திருக்கிறது.

தந்திமூலம் போட்டோ

போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் பின்வருமாறு அறிவிக்கின்றார்:—

'ஏற்கனவே பிரிட்டனுக்கும் ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், ஸ்வீடன் முதலிய பல நாடுகளுக்கும் தந்தி மூலம் படங்களை யனுப்ப வசதிகள் இருந்து வருகின்றன. நாளை முதல் பிரிட்டனுக்கும் இத்தாலிக்கும் தந்தி மூலம் படங்களையனுப்ப வசதிகள் செய்திருக்கிறோம். பொது ஜனங்கள் இந்த உபயோகித்துக் கொள்ளலாம்.

சேயுற்பத்தி.

இராமநாதபுரம் ஜில்லா, வேலியாத்தூர் திரு நா. ச. கு. அழகு பாண்டியனுக்கும் திருமதி ஆதம்மை அழகுபாண்டியனுக்கும் 30-8-31 ஞாயிற்றுக்கிழமை ஆண்சேய் பிரசன்ன மாயினர். சேய்க்குச் சுயமரியாதைக்கொள்கைப்படி துளசிங்கபாண்டியனென்று நாமகரணம் சூட்டப்படும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

நத்தம் முஸ்லீம் சங்கர்,
அபிராமம்.

அனுதாபக்கூட்டம்.

9-9-31 தேதி மாலை 4-30 மணிக்கு நமது சங்க ஹாலில் அபிராமம் ஜனாப் ம. கா. மு. அப்துல் கரீம் சாகிப் அவர்களின் தலைமையின் கீழ் இரங்கூனில் சோலிய முஸ்லீம் சமூகத்தலைவரும், எமது சங்கத்தின் போஷகருமாகிய ஆலி ஜனாப் வி. மீ. அப்துல் ரஹ்மான் அம்பலம் அவர்கள் எதிர்பாராத வண்ணம் 8-9-31 தேதி காலை 6-15 மணிக்கு இரங்கூனில் தேக வியோகமடைந்த விஷயமாய்க் கூடிய அனுதாபக்கூட்டத்தில் ஜனாப் ப. கா. பீர்முஹம்மது சாகிப் அவர்கள் ஆலி ஜனாப் வி. மீ அப்துல் ரஹ்மான் அம்பலம் (மர்ஹூம்) அவர்கள் தம ஜீவிய காலத்தில் செய்த பரோபகார தர்ம கைங்கரியங்களைப்பற்றி வெகு விரிவாகப்பேசியபின் அன்னவர்களால் ஆலி ஜனாப் வி. மீ. அப்துல் ரஹ்மான் அம்பலம் [மர்ஹூம்] அவர்களின் குமாரரான ஜனாப்வி.அ.சையிதுமுகம்மது அம்பலம்அவர்களுக்குஇரங்கூனுக்கு] தந்திமூலமாய் நமதுசங்கத்தாரின் அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்வதெனவும், ஆலி ஜனாப் வி. மீ. அப்துல் ரஹ்மான் அம்பலம் [மர்ஹூம்] அவர்களால் நமது சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட "விஜயன் புஸ்தகசாலை"யை அன்னவர்களின் ஞாபகார்த்தமாக "விஜயன் அப்துல் ரஹ்மான் புஸதகசாலை" என்னும் நாமங்கொண்டழைப்பதென ஜனாப பா. செ. அப்துல் காதர் சாகிப் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு தலைவர் முடிவுரைக்குப்பின் மாலை 6 மணிக்குக் கூட்டம் கலைந்ததென ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதைச்சீர்திருத்த மணம்.

தெம்மாப்பட்டுவைக்கம்வீரர்வாசகசாலையின் சார்பில்நடைபெற்று வரும் சமதர்ம செந்தமிழ்கலாசாலைத்தலைமை ஆசிரியர் திருமிகு. ரா. சிவசுப்பிரமணியம் அவர்கட்கும், ஆசிரியர் திரு மிகு சி. முருகன் அவர்களின் சகோதரி திருமதி சி. சிவகாமி அம்மாளுக்கும் (30-8-31)ல் திருவாளர், வெ, இராமலிங்கம்பிள்ளை அவர்களின் இல்லத்தில்வைத்து சுயமரியாதைக்கொள்கைப்படி திருமணம் நடந்தேறியது. காரைக்குடி, ஆத்தங்குடி, சிராவயல், திம்மலப்பட்டி, திருப்பத்தூர் முதலிய ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாகப் பலர் கூடியிருந்தனர். அதுகாலை வைக்கம்வீரர் வாசகசாலை உபத்தலைவர் உயர் திரு கோவிந்தசாமி அவர்கள் வந்திருந்த அனைவோரையும் வரவேற்று காரைக்குடி சுப்பிரமணியஞ்செட்டியார், குருகுல அமைச்சரான திருவாளர் கு. கும்பலிங்கம் அவர்களை இத்திருமணத்தை நடத்திவைக்குமாறு வேண்ட, அவரும் அதற்கிணங்கி மணமக்களைப்பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். மணமக்கள் மோதிரம் மாற்றிக்கொண்டபின்னர் ஆசிரியர்களான திருவாளர்கள் பெ. பூதலிங்கம் பே மாணிக்கவாசகம், சி. முருகன் முதலியவர்கள் பேசினார்கள். திருவாளர்கள் T.V.R. தொந்தியாபிள்ளை அவர்கள் மணமக்களைப்பாராட்டிஅவர்களுக்குப் "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் சுவடியை ஞாபகார்த்தமாக அளித்தார். சாப்பாடு முடியவும் வெளியூர் அன்பர்கள் தத்தம் ஊர்செல்ல, மற்றையோரால் வாசகசாலை முன் ஓர் பொதுக்கூட்டம் நடத்தப் பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கணவன் தேவை.

பெண்ணின் யோக்கியதை:— 16-வயதுள்ள அழகியபெண், தமிழ் நன்றாய் எழுதப்படிக்கத் தெரியும், சங்கீதத்தில் இராகம் பல்லவி பாடக்கூடிய ஞானமுண்டு, நல்ல குணமும் உயர்ந்த நடையும் அளவுக்கு மீறிய ஒழுக்கமும் உடையது. விவாகமில்லாக்கன்னிப்பெண். புருஷனுக்கு இருக்கவேண்டிய யோக்கியதை:- வாலிபராகவும், கல்வி அறிவுஉடையவராகவும், தகுந்த செல்வமுடையவராகவும், அழகியதோற்றமும், வியாதிஇல்லாத சரீரமுடையவராகவும் இருக்க வேண்டும். பெண்ணின் தாய் தந்தையர்களுக்கு பெண்ணின் கல்விச்செலவும், சங்கீதம்பயிற்றுவதற்குப்பிடித்த செலவும் கொடுக்கவேண்டியிருக்கும்.

சுயமரியாதை
C/o "குடி அரசு" ஈரோடு.

மதிப்புரைகள்.

ஆஸ்திக—நாஸ்திக சம்வாதம்.

அரிய புத்தகம்.

'ஆஸ்திக—நாஸ்திக சம்வாதம்' என்னும் ஒரு அரிய புஸ்தகம் ஒன்று காஞ்சீபுரம் திருவாளர் நாஸ்திகன் சி. கே. குப்புசாமி அவர்களால் பிரசுரிக்கப்பட்டு நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதை வரப்பெற்றோம்.

அப்புத்தகமானது இன்றைக்கு 42-வருஷங்களுக்கு முன்னால் சென்னையில் திரு டி. இராமசாமி பண்டிதர் என்பவரால் வெளியாக்கப்பட்ட ஒரு பழைய பிரதியை புதுப்பித்ததேயாகும். இதில் ஆஸ்திகன்-நாஸ்திகன் என்னும் இரண்டு பெயர்களால் வினா விடை ரூபமாக சம்வாதம் நடத்தப்பட்டிருக்கின்றது.

இந்த வினாவிடை சம்வாதமானது சாதாரண பாமர மக்களுக்கும், மிகவும் படித்துத்தேறினவர்களான பண்டிதர்களுக்கும் பயன்படும்படியான அவ்வளவு அரிய விஷயங்களும் ஆராய்ச்சி நுட்பங்களும் நிறைந்ததாகும். இதில் கடவுள் என்பது மாத்திரமல்லாமல் மதம், கர்மம், விதி, ஆத்மா, நித்தியம், அநித்தியம், பஞ்சபூதம், இயற்கை முதலிய அனேக தத்துவங்களைப்பற்றி தாராளமாக சம்வாதம் நடத்தப்படப் பட்டிருக்கின்றன.

இது ஞானசூரியன் (டிம்மி 1-க்கு எட்டு) சைசில் 175 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகமாகும். அதன் பிரசுர கர்த்தாவான நண்பர் நாஸ்திகன் சி. கே. குப்புசாமி அவர்களது நாஸ்திக உணர்ச்சியும், சுயமரியாதை ஊக்கமும் இவ்வளவு பெரிய புஸ்தகத்தை அச்சிட்டு மிகக் குறைந்த விலையான 0—6—0 அணாவுக்கு கொடுக்க சம்மதித்து இருக்கிறார். இப்புஸ்தகத்தை யாரும் வாங்கிப் படித்துப்பார்த்து உண்மைஉணர வேண்டியது அவசியமாகும்.

எட்டு அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டில் அனுப்பிக் கொடுப்பார்.

விலாசம்:-

நாஸ்திகன் சி. கே. குப்புசாமி,
பட்டு ஜவுளி வியாபாரம்,
40, ஏ. இராஜவீதி பெரிய
காஞ்சீபுரம்.

வில்வாதித் தைலம்.

நன்னிலம் திரு. எம். துரைசாமி பிள்ளை அவர்களால் தயாரித்த வில்வாதித் தைலம் ஒரு சிறு டப்பி நமது பார்வைக்கு வந்தது.

அது தேய்த்து முழுகவும், தலை சீவிக்கொள்ளவும் மிகவும் உபயோகமாயிருப்பதுடன் மேகம், பித்தம், குன்மம் முதலிய சம்பந்தமான அனேக வியாதிகளை கண்டிக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது

விலாசம்:-

எம். துரைசாமி பிள்ளை,
சித்த வைத்தியசாலை,
ஆத்தங்கரை தெருவு
நன்னிலம். (எஸ். ஐ. ஆர்.)

கிழவர் குமாரானார்.

மேற்குறிப்பிட்ட புத்தகம் ஒன்று வரப் பெற்றோம். இதனை ஆக்கியோன் கிழச்சீவற்பட்டி திரு. லெ. சோமசுந்திரன் அவர்களாகும். இப்புஸ்தகத்தில் பெரும் பிரபல அமெரிக்க வியாபாரியான "சான் போர்ட் பென்னட்" என்பவரின் வாழ்க்கை இரகசியமும், சரித்திரச்சுருக்கமும், அன்னார் 50-ம் வயதில்மூப்படைந்து கிழமெய்தியும் தன் சுயமுயற்சியாலும், தேகப் பயிற்சியாலும் எவ்வாறு தேகக்கட்டும், ஆரோக்கியமும், இளமையும் ஒருங்கே அமையப்பெற்று விளங்கினார் என்பதை மிகத்தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் கடவுள் செயலிலும், விதி வலிமையிலும் மூட நம்பிக்கையும், குருட்டுப் பற்றுதலும் வைத்திருக்கும் நம்மவர்களுக்கு இவரது சரிதம் ஓர் சிறந்த பதிலாகும். எவ்வளவு வயது சென்றவர்களானாலும் சுயமுயற்சியாலும், தேக அப்பியாசத்தாலும், பரிசுத்த வாழ்க்கையாலும் இளமையும், திடசரீரமும் பெறலாமென்ற ஆசிரியரின் அபிப்பிராயத்தை மெச்சுகிறோம். ஆண்மை இழந்து, வீரங்குன்றி வாழும் நம் நாட்டு மக்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்த இது போன்ற பல புஸ்தங்கள் வெளிவருதல் மிகவும் இன்றியமையாதது. மாணவரும், ஏனையோரும் இத்தகைய புஸ்தகத்தைப் படித்துப் பயன் பெற வேண்டியதவசியமாகும்.

கிடைக்குமிடம்:-

லெ. சோமசுந்திரன்,
கிழச்சீவற்பட்டி.

ஜீவிய சரிதை.

சென்னை சைபுல் இஸ்லாம் ஆசிரியர் மௌலானா மௌல்வி அஹமத்சயத் சாகிப் அவர்களால் இயற்றப்பெற்ற, அலிஜனாப் ரா.இ. ஹாஜி முகமத் காசிம் ஜே. பி. மர்ஹூம் அவர்களின் ஜீவிய சரிதையொன்று வரப்பெற்றோம். இதில் ஜனாப் முகம்மது காசிம் அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, சுயமுயற்சியால் பொருள் திரட்டியதும், வியாபாரத்துறையில் பிரக்யாதியடைந்ததும், மலேயா நாட்டின் பலபாகங்களில் கம்பெனிகள் வைத்து நடத்திப்பெயரும், புகழும் பெற்ற விதமும், ஈட்டிய பொருளில் பெரும் பகுதியை தருமார்த்தமாக பொது ஸ்தாபனங்களுக்கும், ஏழைகள் கஷ்டத்தை நிவர்த்திக்கவும், சமூகமுன்னேற்றத்திற்கும், தேச நலத்திற்கும் க்ஷேமையான வழிகளில் செலவு செய்த விதங்களும் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. நுண்ணறிவாலும், சுயமுயற்சியாலும் எவ்வித தாழ்ந்த நிலைமையிலுள்ளோரும் உயர்பதவியடையலாமென்பதை இவரது சரித்திரத்தைப் படிப்போருக்கு விளங்கும். வியாபார சாமர்த்தியமும் பரோபகார சிந்தையுமமைந்த இவரது சரிதம் எல்லோராலும் படிக்கவேண்டியதாகும்.

தமிழ்கடல் வெளியீடு, 3.

சென்னை தமிழ்பண்டிதர் உயர்திரு கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் ஆத்திச்சூடி முதல் சங்கச்செய்யுள் இறுதியாக உள்ள நூல்களை "தமிழ் கடல்" என்னும் பெயரால் இயற்றி வெளியாக்க எடுத்துக்கொண்ட அரும் பெரும் முயற்சியின் பயனாய் இதற்கு முன் இரண்டு புஸ்தகங்கள் வெளியாக்கப்பட்டிருக்கும் செய்தி வாசகர்கள் அறிந்ததேயாகும். இப்போது மூன்றும் புஸ்தகம் வரப்பெற்றோம். இதில் ஆசிரியர் அவர்கள் வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிசாரம் முதலியவைகளுக்கு மூன்று உரைகளுடன் நல்ல நவீன முறையில் தமது கல்வித்திறமையாலும், ஆராய்ச்சி வன்மையாலும் ஒவ்வொரு செய்யுளுக்கும் பதவுரை, பொழிப்புரை முதலியன வரைந்துள்ளார். இவை பெரிதும் அறிவை வளர்ப்பதாயும், காலத்திற்கொத்ததாயும், தமிழ் கற்றுத்தேற அவாக்கொண்ட அனைவருக்கும் உதவக்கூடியதாயும் இருக்கின்றது. பண்டை நூல்கள் காலத்திற்கொத்தாப்போல் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட வேண்டிய அவசிய முணர்ந்தார், அவ்வாறே கிரியாம்சையில் செய்யத் துணிந்த திரு. முதலியார் அவர்களைப் பாராட்டுகிறோம். நல்லறிவு பெற்று தேசமக்களாகப் போகும்மாணவர்களுக்கு பாடசாலைகளில் இத்தகைய புஸ்தகங்கள் பாடப் புஸ்தகங்களாக வைக்கப்படின் அளவிடற்கரிய பயனளிக்குமென்பதே எமது அவா. கெட்டியாகபைண்ட் செய்யப்பட்டு 200 பக்கங்களுக்கு மேல்கொண்டது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1.

கிடைக்குமிடம்:- மானேஜர்,
தமிழ்கடல் ஆபீஸ்,
சென்தோம், சென்னை.

சாத்தான்குளம் கைரியா சங்கம்.

இச்சங்கத்தின் மாதாந்த மீட்டிங் சென்ற 9-9-31 காலை 9மணிக்கு தலைவர் ஜனாப் மு. அ. மீ ஹஸன்மீராமுகையதீன்மரைக்காயரவர்கள் தலைமையில் கூடி முதலில் வரவு செலவு கணக்கு, மெம்பர்கள் தேர்தல் முதலிய விஷயங்கள் யோசிக்கப்பட்டபின், சிலோன் பதுளையில்ஒருகிளைஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டிய விஷயமாய் ஆலோசிக்கப்பட்டது, ஜனாப்களான மு. சா. மு. அபூபககர் சாகிப்எம். எம்.ஹூசைன் சாகிப் இவர்களைபதுளைக்கிளைஸ்தாபன நிர்மாணக்காரியதரிசிகளாக நியமிக்கவேண்டுமென்று ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது பின்னர் சங்கத்தின் மானேஜ்மெண்டில் ஏற்கனவே நடந்துவரும் வாசகசாலைக்கு காரியதரிசியாக ஜனாப் எஸ். எம். முகமது அலி அவர்களைத்தெரிந்தெடுத்தபின் கூட்டம் இனிது கலைந்தது என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

அறிக்கை.

6-9-31ந்தேதி ஞாயிற்றுக்கிழமைமாலை 5-மணிக்கு வாலர்ஸ் ரோட்டிலுள்ள சென்னை நரசிங்கபுரம் பௌத்த சங்கத்தில் திரு பி. எல். நரசு பி. ஏ. அவர்களின் முன்னிலையில் கீழ்கண்டவர்கள் பௌத்த மதத்தில் சேருவார்கள். திருவாளர்கள் பி. டி. தாஸ், பி. டி. குண்டலகேசி, பி. ராபர்ட்தாஸ், நரசிங்கபுரம். ஆர். பி. தங்கவேலு, வி. துரைசாமி, புதுப்பேட்டை. எம். ராஜூ, காமாட்சி அம்மாள், ஆர். ரங்கநாதன், சேத்துப்பட்டு.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

காட்டக்கூடும். ஆனால், விரிவஞ்சி விடுகின்றோம்.

பின்னர் நமது நண்பர் திரு. சுப்பையா 100 வருஷங்களுக்கு மேல் உயிர் வாழ்ந்த நான்கு பேரைக்குறிப்பிட்டு அவர்கள் மாக்கறி உண்வு சாப்பிட்டதால் நெடுநாள் உயிர் வாழ்ந்ததாகச் சொல்லுகிறார். மாமிச ஆகாரத்தைத் தாராளமாகச் சாப்பிட்டவர்களிலும் 100 அல்லது 150 வருஷங்கள் உயிர்வாழ்ந்திருந்தோர் பலர் உளர். இதை நண்பர் அறியாமலிருப்பது விசனிக்கத்தக்கது.

இனி மாமிச ஆகாரம் புசிப்போர் தான் அதிக நாள் நோயின்றி உயிர் வாழ்கிறார்கள் என்பதை தக்க ஆதாரத்துடன் விளக்குவோம். ஒருவர் இருவர் 100 அல்லது 150 வருஷம் உயிர் வாழ்ந்ததைக்கொண்டு இதை நிச்சயிக்கக்கூடாது. ஒரு சமூகம் அல்லது ஒரு தேசத்து ஜனங்கள் நெடுநாள் ஜீவித்திருந்தால் அதைக்கொண்டு நாம் நிர்ணயிக்கலாம். அவ்விதம் நிர்ணயிப்பதாயிருந்தால் மாமிச உணவு சாப்பிட்டவர்கள் தான் நெடுநாள் உயிர்வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. மெச்னிக்காப் என்னும் புகழ்பெற்ற வைத்தியர் "நீண்ட ஆயுள்" என்னும் புத்தகத்தில் (E. Metchnikoff's Prolongation of Life) நெடு நாள் உயிர் வாழ்ந்திருந்த தேசத்தாரைக் குறிப்பிட்டு அவர்கள் எல்லோரும் புளித்த தயிரைச்சாப்பிட்டு வந்ததால் நெடு நாள் ஜீவித்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறார். தயிர் என்பது மாமிச உணவு. மாமிச உணவாகிய தயிரைச்சாப்பிடுவோர் நெடுநாள் வாழ்கிறார்கள் என்று அவர் சொல்லியிருப்பதை நன்கு கவனிக்கவேண்டும்.

இனி திரு. சுப்பையாவும், அவரைப்போன்ற மரக்கறி வெறியர்களும் மாமிச உணவாகிய பால், தயிர், நெய்களைச் சாப்பிடுகிறார்களா? இல்லையா? என்று கேட்கிறோம். இவர்கள்சாப்பிடுவதுபோதாதென்று இவர்கள் கும்பிடுகிற சாமிகளின் பேரிலும் இந்த மாமிச உணவுகளாகிய பால், தயிர், நெய்களை ஊற்றி அபிஷேகம் செய்கிறார்களா? இல்லையா? மூட ஜனங்கள் மாமிசங்களைத்தங்கள் சாமிக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். நமது காருண்யம் மிக்க சைவர்கள் பால், தயிர், நெய், வெண்ணெய்களை மாமிச உணவு என்று கருதாமல் அவைகளைத் தங்கள் சாமிகளின் தலையில் ஊற்றுகிறார்கள். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

தியாசிஸ்ட் என்னும் சங்கத்தைச்சேர்ந்தோர் கோழி முட்டைகளை தாவர உணவு என்று சொல்லுகிறார்கள். நமது சுப்பையாவும் அவரைச் சேர்ந்தவர்களும் தினந்தோறும் சாப்பிடுகிற பால், தயிர், நெய்களும் மரக்கறி உணவுதானோ? "சற்சூத்திரன்" என்பது போல இவைகளை சத்மாமிசம் (நல்ல மாமிசம்) என்று சொல்லுவார்களோ? மாமிச வெறியற்ற இவர் சத்மாமிசங்களை ஏன் புசிக்கிறார்? முதலில் இவர் பால், தயிர், நெய் சாப்பிடுவதை நிறுத்தி, பின்னர் சாமிகளின் தலையில் பால், தயிர் கொட்டுவதை நிறுத்தி பின்னர் இவர் மறுப்பெழுதவந்திருந்தால் நன்றாயிருக்கும்.

"இந்தியா, இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய கண்டங்களில் ஜீவதயா சங்கங்களும், மாக்கறியுண்ணும் கட்டுப்பாடுள்ள சங்கங்களும், ஜீவன்களை வைத்து வளர்க்கும் இடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன" என்று எழுதுகிறார்.

புலால் மறுத்தல் சங்கங்கள் மேல் நாடுகளிலிருப்பது உண்மைதான். அங்கு மாமிச உணவுகளை மிதமிஞ்சி புசிப்பதால் அதைத்தடுக்க அச்சங்கங்கள் அவசியம். ஆனால், அச்சங்கம் இந்தியாவுக்குத் தேவையில்லை. அதற்கு மாறாக புலால் உண்ணும் சங்கங்களை ஏற்படுத்துவது அவசியம் என்றும் சொல்லுவேன். இப்படிச்சொல்வதற்குக் காரணமில்லாமலில்லை.

முதலாவது, தென்னிந்தியாராகிய நாம் சாப்பாட்டு விஷயத்தில் கவனம் செலுத்தாமல், இப்போது சாப்பிட்டு வரும் ஆகாரத்தையே சாப்பிட்டு வருவோமானால் "ஒன்றிரண்டு நூற்றாண்டுக்குள்ளாக மிகவும் பலமற்ற ஜாதியாராகி விடுவோம்" என்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், தென்னிந்திய ஜனங்களாகிய நாம் உலகத்திலுள்ள ஜனங்களுக்கு மத்தியில் சமஉரிமையுடைய விரும்பினால் நாம் ஆகாரத்தைச் சீர்திருத்தி உடல் உறுதியும் மன உறுதியும் அடையவேண்டும். இதற்கு மரக்கறி உணவோடு மாமிச உணவுகளையும் தாராளமாய் உண்ணவேண்டும்.

இரண்டாவது, அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் இந்தியராகிய நம்மைக்குடியேற விடுகிறதில்லை. இந்தியர்கள் அங்கு போய்க் குடியேறி வசிக்கக்கூடாதென்று அத்தேசத்தில் சட்டம் செய்திருக்கிறார்கள். ஆனால் சீக்கியர் போன்ற உடல் பலமும் மனோ திடமும் உள்ள இந்திய ஜாதியாரை அங்கு குடியேற அனுமதிக்கிறார்கள். தென்னிந்தியாவிலிருந்து ஒருவரும் அங்கு குடியேற முடியாது. தென்னிந்தியர் உடல் பலமற்று, மனதிடமில்லாமல் இருப்பதால் அங்கே குடியேறக்கூடாதென்று அத்தேசத்துச்சட்டம் தடுக்கிறது. அதாவது அத்தேசத்தார் தென்னிந்திய ஜனங்களை மனோ பலத்திலும், தேக பலத்திலும் தாழ்ந்தவராக மதிக்கிறார்கள். இவ்விதம் அயல் நாட்டாரால் அவமதிக்கப்படுகிற நாம், நம்மை உயர்வு படுத்திக்கொள்ள முயற்சி செய்ய வேண்டுமா? அல்லது இப்பொழுதுஇருக்கிற தாழ்ந்த நிலைமையிலேயேஇருக்கவேண்டுமா? என்று தான் கேட்கிறேன். இதை உத்தேசித்தாவது நாம் நமது ஆகாரத்தைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா? என்றும் கேட்கிறேன்.

திரு. சுப்பையா அவர்களின் போலி மறுப்புக்கு விடையிறுப்பதை இதனோடு நிறுத்திக்கொண்டு கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். அதாவது, காய்கனிகளைப் புசித்துக்கொண்டே பலவான்களாயும், வீரபுருஷராயும் ஆரோக்கியமாயும் இருக்கலாம் என்றாலும், மரக்கறி உணவோடு, மாமிச உணவையும் புசிப்பதனால் அதைவிட பன்மடங்கு பலவான்களாயும், வீர புருஷர்களாயும், ஆரோக்கியமாயும் இருக்கலாம் என்பதோடு, தேகபலமும், மனோ பலமும் அதிகரிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டம் வேறு, மத தர்மம் வேறு.

"ஒரு மனிதனுடைய சொத்துக்களை பலாத்காரத்தினால் பிடுங்கிக்கொள்ளுவது" என்பது இந்தியன் பினல்கோட்படி குற்றமாகலாம். ஆனால் இந்துமத தர்மப்படி அது குற்றமாகாது. ஆதாரம் என்னவென்றால், இந்து மதவேதத்தின் சாரமாகிய மனு தர்ம சாஸ்திரம் 9-ம்-அ 248-ம் சுலோகத்தில் 'ஒரு சூத்திரன் பொருள் வைத்திருந்தால பிராமணன் தன் இஷ்டப்படி கொள்ளைஇடலாம்.'

அ. 8. சு. 417.

"சூத்திரன் தேடியபொருள்களை எல்லாம் பிராமணன் சந்தேகமின்றி பறித்துக்கொள்ளலாம்."

திருமணம்.

திருவிசலூர் திரு சு குப்புசாமி பிள்ளை அவர்கள் குமாரத்தி திருமதி இராஜலக்ஷிமி அம்மாளுக்கும், கீவலூர் திரு சொ- குமரவேலுபிள்ளை குமாரன் திரு சுப்பிரமணியம் அவர்களுக்கும் 9-9-31 புதன்கிழமை சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மணவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:–வயது 55. ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாதிரம் மாதம் 1-க்கு பலநூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும் உடையவர். நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன:– வயது 30 முதல் 40க்குட்பட்டதாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, ரெட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல் வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா

C/o "குடி அரசு" ஈரோடு.

உடுமலைப்பேட்டை

முன்சீப் கோர்ட்டு.

1930வரு அ. நெ. 1314.

அழகாயம்மாள்—வாதி.

கோயமுத்தூரிலிருக்கும் வெங்கிடு சுப்பாசாரி மகளும் கந்தசாமி ஆசாரி பெண்சாதியுமான திருமலையம்மாள்—1ம்பிரதிவாதி.

ஷை நெம்பரில் ஷை வாதி ஷை 1ம் பிரதிவாதி வகையரா பேரில் ஜீவனாம்சபாக்கி ரூ. 360-0-0ம் செலவும் கிடைக்கவேணுமாய் வியாஜ்யம் செய்து 25-9-31உ விசாரணைக்காக வாய்தா போட்டிருக்கிறது. ஷை தேதியில் ஷை 1ம் பிரதி வாதி ஷை கோர்ட்டில் ஆஜராகத்தவறினால் ஒரு கக்ஷி செய்யப்படும் என்ற விபரம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

A. முத்தையா பிள்ளை,
B. A., B. L., வாதி வக்கீல்
உடுமலைப்பேட்டை 11-9-1931.

கடவுள் மீது குற்றப்பத்திரிகை.

அமெரிக்க குடி அரசு அரசாங்கத்தில் கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்கு என்றுவருஷத்தில் ஒருநாள் அதாவது ஒவ்வொருநவம்பர் மாதத்திய கடைசி வியாழக்கிழமையை ஒதுக்கிவைக்கப்பட்டு வருஷந்தோறும் அந்த நாளை விடுமுறை நாளாக்கி கடவுள் மக்களுக்காக செய்த நன்மைக்காக நன்றி செலுத்தும் நாளாய்க்கொண்டாடப்பட்டு வருகின்றது.

சென்ற வருஷத்தில் அமெரிக்க நாஸ்திக சங்கத்தார் அமெரிக்க குடிஅரசு தலைவருக்கு ஒரு அறிக்கை அனுப்பி இனி மேல் இம்மாதிரி செய்யக்கூடாதென்றும், இந்தப்படி ஒரு நாளை வீணாக்கக் கூடாதென்றும் தெரிவித்துக் கொண்டார்கள். இதை அந்த அரசாங்கம் சிறிதும் கவனிக்கவில்லை.

ஆகையால் அச்சங்கத்தார் இவ்வருஷம் இவ்விஷயங்களை எடுத்துக்காட்டி பொது ஜனங்களுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டு இருப்பதுடன் குடி அரசு தலைவருக்கும் ஒரு பகிரங்கக்கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அதன் நகல் ஒன்று அச்சங்கத்தாரால் நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றதை அப்படியே மொழிபெயர்த்துக் குறிப்பிடுகின்றோம்.

பகிரங்கக்கடிதம்.

“அன்புள்ள பிரசிடெண்டவர்களே !

அமரிக்க அரசாங்கத்தின் கீழ் கடவுளுக்கு நன்றி செலுத்தும் நாளைக் கொண்டாடச் செய்யக் கூடாது என்பதாக தங்களுக்கு நாங்கள் தெரிவித்துக்கொண்ட ஆக்ஷேபணைகள்கவனிக்கப்படாததினாலேயும்,

இந்த வருஷ சம்பவமானது உலக மக்களுக்கு நன்மையைவிட தீமையையே அதிகமாக விளைவித்திருப்பதாலும்,

இந்த நிலைமையில் மக்களுக்கு நேர்ந்ததீமைகளைப்பற்றி சிறிதும் பிரஸ்தாபிக்காமல் நன்மைகளை மாத்திரம் பாராட்டுவதென்பது ஏதேச்சாதிகாரத்தினால் அடக்கியாளப்படும்ஆசியா கண்டத்து அடிமை மக்களின் மனப்பான்மையையொத்ததாகுமே தவிர சுதந்திரமுள்ள அமரிக்க குடி அரசு நாட்டு மக்களின் தன்மைக்கு சிறிதும் பொருந்தாததாகுமாதலாலும்,

நாங்கள் அடியிற்கண்ட தீர்மானங்களைச் செய்திருக்கின்றோம். அவைகளென்னவென்றால்;—

1. இது சம்பந்தமான பிரசிடெண்டினுடைய (உங்களுடைய) செய்கைக்காக நாங்கள் கண்டனம் செய்வதில்லை

2. சர்வவல்லமையுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று தீர்மானம் செய்துகொண்டு அவரால் மக்களுக்கு விளைந்த நன்மைக்கு நன்றிபாராட்டக்கூடியதினத்தில்நாம்உண்மையாகவேநன்றிபாராட்டுவதாக இருந்தால் அவரால் ஏற்பட்டநன்மைதீமைஇரண்டையும் கணக்குப் போட்டு பார்த்து தீமை அதிகமாயிருந்தால் அந்த நாளை கடவுள்மீது குற்றம் சாட்டும் நாளாகவும் கொண்டாடப்பட வேண்டியது நியாயமானதே யாகும்.

இந்தக் காரியமானது இந்த வருஷமும் மற்றும் எதுவரை இந்தமாதிரியான நன்றி பாராட்டும் நாள் என்பதைக்கொண்டாடும் ஒரு ஒழுங்கற்ற காரியத்தைக்கொண்டாட வேண்டுமென்ற பிரசிடெண்டினால் கையாளப்பட்டு வருகின்றதோ அதுவரை குற்றம் சாட்டும் நாளையும் வருஷம் தோறும் கொண்டாடிவரவேண்டுமென்று தீர்மானிக்கின்றோம்,

3. உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் அனுபவித்து வரும் அளவுக்கு மீறியதான துன்பங்களை எடுத்துச்சொல்லவும், அவற்றிற்கு காரணக்கர்த்தராயிருக்கின்ற கடவுளின்மீது குற்றம் சாட்டவும் நவம்பர் 26-ம் தேதி வியாழக்கிழமை மாலை நியூயார்க் வெப்ஸ்டர் மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதாக தீர்மானிக்கிறது.

4. இந்தக் கூட்டத்திற்கு ஜீவனத்திற்கு வேலையில்லாமல் திண்டாடுகின்றவர்களையும் பட்டினியால் வருந்துகின்றவர்களையும், நோயால் துன்பப்படுகின்றவர்களையும், மற்றும் தங்களுக்குத் தெரிந்த அளவில் யாதொரு குற்றமும் செய்யாத நிரபராதிகளாயிருந்து கடவுள் கோபத்திற்கு ஆளாகிக் கஷ்டப்படுகின்ற ஜனங்களையும் எங்களுடைய இந்த அமரிக்க நாட்டிலேயே முதன் முதலாக நடைபெறும் இந்தக்குற்றம் சாட்டும் தினக்கொண்டாட்டத்தில் எங்களோடு வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று அழைக்கின்றோம்.

மற்றும் இதுபோன்ற குற்றம் சாட்டும் நாள் கொண்டாட்டத்தை அறிவும்சுதந்திரமும் உள்ள மக்கள் ஆங்காங்கு கூட்டம் கூட்டி கொண்டாட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்,

5. அன்றியும் அரசியல் கக்ஷிக்காரரையும், சமூக பொதுநல முன்னேற்ற இயக்கக்காரர்களையும்இந்தக்கொண்டாட்டத்திலகலந்து பங்கெடுத்துக்கொள்வதன் மூலம் கடவுள் மக்களுக்கேற்படும்கெடுதிகளைக் குறைக்கும் படியாகவும்,நன்மைகளை அதிகரிக்கச் செய்யும்படியாகவுமான பாக்கியத்தைக் கடவுளிடமிருந்து மக்கள் பெறமுயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

6. கடைசியாக நாங்கள் சொல்லுவதென்னவென்றால் கடவுளுக்கு நன்றிபாராட்டும் கொண்டாட்டமென்பதோ அல்லது கடவுள்மீது குற்றம் சாட்டும் கொண்டாட்டமென்பதோ ஒன்றைவிட்டு ஒன்று தனியாக நடத்துவது என்பது நாணயக்குறைவான காரியமாகும். ஆகையால் அமரிக்க குடி அரசு தலைவர் நன்றிசெலுத்தும் நாள் கொண்டாட்டத்தை மட்டும் நடத்துவாரேயானால் நாங்களும் குற்றம் சுமத்தும்நாளை கொண்டாட வேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

மற்றபடி பிரசிடெண்ட் அவர்கள் நன்றிசெலுத்தும்நாளைக்கொண்டாட ஏற்பாடுசெய்யவில்லையானால்,கொண்டாடவேண்டிய மத சம்பந்தமான விளம்பர அறிக்கையை வெளிப்படுத்தவில்லையானால் நாங்களும் அப்பொழுது கடவுள் மீது குற்றம் சுமத்தும் நாள் கொண்டாட்டத்தை நடத்துவதில்லை என்பதாகத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

என்பதாகத்தீர்மானித்து இத்தீர்மானங்களை அமரிக்க குடி அரசு தலைவருக்குப்பகிரங்கக் கடிதமாகஎழுதியிருக்கிறார்கள்.

அபாயத்தை அறிந்து கொள்ளும் என்ஜின்.

பிரிட்டிஷ் ரயில்வே சீர்திருத்தம்.

கிரேட் வெஸ்டர்ன் ரயில்வேயில் தானாகவே அபாயத்தை யுணர்ந்து கொள்ளும் என்ஜின்களை உபயோகித்து வருகின்றனர். 250 என்ஜின்களுக்கு இவ்வித யந்திரத்தை அமைத்திருக்கின்றனர். 25,00 பவுன் செலவாயிருக்கின்றது. எதிரேயுள்ள கைகாட்டிமரங்கள் முதலிய அடையாளங்களின் நிலைமையும், தன்மையும் குறித்து இவ்வியந்திரம் டிரைவருக்கு உரக்கச் சப்தமிடுகிறது. இதனால் அபாயம் நேருவதற்கு இடமில்லாது போவதுடன் வெகு வேகமாகவும் போகக்கூடும்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருபவருமான தோழர் சி. கன்னையா அவர்கள் பகவத்கீதையை நாடகரூபமாக நடித்து அதில் வசூலாகும் பணத்தில் ஒரு லட்சம் ரூபாயில் சென்னையிலுள்ள ஒரு கோவிலுக்கு இரத்தினமுடி செய்துவைக்கப் போவதாகவிளம்பரம் வெளியிட்டிருப்பதானது நமது நாடுஇருக்கும்தற்கால நிலைமையில் பெரிதும் வெறுக்கத்தக்கதாய் இருப்பதால் தேசவிடுதலைக்கும்மக்கள்விடுதலைக்கும் அறிவு விடுதலைக்கும் அடிப்படையான கல்வி, கைத்தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள் ஏற்படுத்தும்படியான வழிகளிற்செலவிடும்படி இம்மகாநாடு தோழர் கன்னையா அவர்கட்கு தெரிவித்துக்கொள்கிறது.

(a) இத்தீர்மானத்தை சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டுப்பிரசாரக் கமிட்டித்திட்டத்தில் சேர்த்துக்கொண்டு வேண்டுவனசெய்யவேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

மேற்கண்ட தீர்மானங்களை முறையே திருவாளர்கள் பொன்னம்பலம், ஈ. வெ. இராமசாமி, எஸ்.இராமநாதன். எஸ். குருசாமி ஏ. ஆர். சிவானந்தம், ஏ. எஸ். தண்டபாணி, என். பி. காளியப்பன், எஸ். வி. லிங்கம், திருமலைசாமி, உடுமலை கனகராஜன், திருமதி இராமமிர்தத்தம்மாள், திரு கல்யாண சுந்திரம், என். தண்டபாணி முதயவர்கள் பிரேரேபித்துஆமோதித்தார்கள். சீக்கிரத்தில் தொண்டர்கள் நிர்வாகக் கமிட்டி கூடி ஏதாவது பயனுள்ளவேலை துவக்கப்படும்.

நாஸ்திகர்களின் விருத்தி.

1926ம் வருஷம் அதாவது ‘குடிஅரசு’ ஆரம்பித்த வருஷத்தில் 120000 நாஸ்திகர்கள் தோன்றினார்கள். 1929ல் இந்த எண்ணிக்கை 2000000 ஆகிவிட்டது. இன்று சுமார் 7500000 இருக்கும். 1933 வருஷத்தில் ருஷியாவில் நாஸ்திகர்கள் எண்ணிக்கை 17500000 ஒன்றே முக்கால் கோடி ஆகக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஜர்மனியில் 2000000 இருபது லக்ஷம் பேர் நாஸ்திகர்களாக இருக்கின்றார்கள். இது இரண்டையும் மற்ற நாட்டிலுள்ள நாஸ்திகர்களையும் கணக்குப்பார்த்தால் சற்றேறக்குறைய மொத்த ஜனங்களில் 100க்கு இரண்டுபேர் வீதம் நாஸ்திகர்களாய் இருப்பார்கள் என்று கணக்கிடவேண்டியிருக்கிறது.

திவான் பகதூர் P. C. N. எதிராஜுலு நாயடுகாரின் அப்பீல்.

அன்பார்ந்த ஐயா!

இந்திய சட்டசபைகளில் ஒன்றாகிய கௌன்ஸில் ஆவ் ஸ்டேட்டில் ஒரு ஸ்தானம் காலியாகியிருக்கிறது. அந்த ஸ்தானத்திற்கு ஒரு அபேட்சகனாக நிற்க வேண்டுமென்று பல நண்பர்களும் என்னைத் தூண்டுகிறார்கள். நான் நூதனத்திட்டத்தின்படி சட்டசபை ஏற்படுத்திய காலமுதலே சென்னை சட்ட சபையில் அங்கத்தினனாய் இருந்து வந்திருக்கிறேன். சட்ட சபைக்குக் கொண்டு வரப்படும் முக்கியமான சட்ட மசோதாக்களை ஆராய்வதற்கான ஸெலக்ட் கமிட்டிகள் பலவற்றிலும் இருந்து உழைத்திருக்கிறேன். இந்த ராஜதானியிலுள்ள முனிசிபாலிடிகள் எல்லாவற்றிலும் புராதனமான முனிசிபாலிடியில் சேர்மனாகவும் இருந்திருக்கிறேன். ஜில்லா போர்டு, கல்வி நிர்வாக கௌன்சில், இரண்டாந்தர கல்வி நிர்வாக போர்டு ஆகிய சபைகளுக்கு பிரஸிடெண்டாகவும் இருந்திருக்கிறேன். மேலும், நீர்ப்பாய்சல் சிபார்சு போர்டு பிரஸிடெண்டாகவும், ரயில்வே சிபார்சு கமிட்டி அங்கத்தினராகவும், ஆந்திரா யுனிவர்சிடி, மதறாஸ் யுனிவர்சிடி ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களைச் சார்ந்த ஸெனட் அங்கத்தினனாகவும் இருந்திருக்கிறேன். ஆகையால் தங்களைப் போன்ற வோட்டர்களின் உதவியால் கௌன்சில் ஆவ் ஸ்டேட்டில் ஓர் அங்கத்தினனாய் இருக்கும் பாக்யம் ஏற்படும்போது மேலே குறித்துள்ள பற்பல துறைகளிலிருந்து வந்துள்ள அனுபவம் எனக்கு மிக்க துணை செய்யுமென்று எண்ணத் துணிகிறேன்.

கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்கள் சம்பந்தமான ரீ ஸெட்டில்மெண்ட் கமிட்டியிலும், விவசாயதக்காவிலோன் கமிட்டியிலும், அங்கத்தினனாயிருந்து பொது ஜனங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டி, என்னால் கூடியவரை போராட்டஞ் செய்துழைத்திருக்கிறேன். தற்போது நம்முடைய நாட்டிற்கு அரசியல் சம்பந்தமாக என்றுமில்லாத ஒரு பெரும தத்து ஏற்பட்டிருக்கிறது. பொது நலவுரிமைகள் சம்பந்தமாக அதிமுக்கியமான விஷயங்களை நுட்பமாய் ஆராய்ந்து ஜனங்களுடைய நன்மையொன்றையே கருதி உண்மைகளை எடுத்துக் கூறுவது அத்யாவசியமாயிருக்கும். மாகாணச் சட்டசபை சம்பந்தமாயும் கடந்த அரசியல் திருத்தங்கள் சம்பந்தமாயும், நெருங்கிய பழக்கமும், அனுபவமும் இருக்கின்ற படியால் அது நமது தேசத்தின் வருங்கால நிர்வாகத்தைப்பற்றி துரைத்தனத்தார் செய்யப்புகும் கோரிக்கைகளை நன்கு ஆராய்ந்தறிவதற்கு எவ்வளவோ உதவியாய் இருக்குமென்று எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

நான் கௌன்ஸில் ஆவ் ஸ்டேட் அங்கத்தினனாகத் தெரிந்தெடுக்கப்பட்டால் அந்தச் சபையில் கண்ணும் கருத்துமாயிருந்து நம்முடைய நாட்டினர் தற்காலத்தில் அரசியல் சம்பந்தமாகப் போற்றிவரும் பெரு நோக்கங்களுக்காக என்னாலியன்றவரை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மன்றாடிபாது காப்பது என்னுடைய ஒரே முயற்சியாயிருக்கும். ஆகையால் என் முயற்சிக்குப் பேருதவியும் துணையும் புரியவேண்டுமென்று தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்: தங்கள்,
P. எதிராஜுலுநாயுடு.
குண்டூர்.

மறுமணம் செய்யாத ஹிந்து விதவை.

முஸ்லீம் வேலைக்காரனுடன் ஓடினாள்.

ஜெசூரைச் சேர்ந்த மஜ்பலியில் வசித்து வந்த சரோஜினி என்னும் ஒரு ஹிந்து விதவை தனது தந்தை வீட்டை விட்டு ஓடி விட்டாள். ஹிந்து மிஷனைச்சேர்ந்த சில தொண்டர்கள் அம்மாதைக் கண்டு பிடித்து டாக்கா அடிஷனல் ஜில்லா மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்தனர். அப்பெண் தனக்கு 25 வயதாகிறதென்றும், தம் வீட்டு வேலைக்காரனான ராம்ஜான் அலிமீது காதல் கொண்டு தானே தன் தந்தை வீட்டை விட்டு அவனுடன் ஓடிப்போனதாகவும் கூறினாள். மாஜிஸ்திரேட் அப்பெண்ணை விடுதலை செய்து விட்டார். அப்பெண்ணை முன்ஷிகஞ்ஜிற்கு அழைத்துவந்து மஜீத் இமாமால் மதமாற்றம் செய்து அப்பெண்ணிற்கும், அவள் காதலன் ராம்ஜான் அலிக்கும் விவாகம் நடைபெற்றது

"சண்டமாருதம்"

தெய்வீகமா? மானுஷீகமா?

தந்திகளின் மூலம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வினாடிக்கணக்கில் சமாச்சாரங்களை அனுப்பி வருவது போலவே ஐரோப்பிய மக்கள் இப்போது உருவங்களையும் தந்திகளின்மூலம் வினாடிக்குள் ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள ஊர்களுக்குப்போய்ச்சேரும்படி அனுப்பி வருகின்றார்கள். இப்போது அந்த முறைகள் இங்கிலாந்து, ஜர்மனி, ஆஸ்ட்ரேலியா, டென்மார்க், ஸ்வீடன் முதலிய தபாலாபீஸ்களில் நடைபெறுகின்றன. இம்மாதம் முதலதேதிமுதல் இட்டேலிக்கும் லண்டனுக்குமாக ஒரு சர்வீஸ் புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் யார்வேண்டுமானாலும் அனுப்பலாம் என்றும், போஸ்டல் இலாகாதார் விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதற்கு விகிதம் ஒரு அங்குல சதுர உருவத்திற்கு 1 பவுன் கொடுக்கவேண்டுமாம்.

இது தெய்வீகமா? மானுஷீகமா? என்பதை தெய்வ பக்தர்களும் தெய்வீகத் தன்மைபொருந்திய பெரியார்களின் சிஷ்யர்களும்தான் தெரிவிக்கவேண்டும்.

மற்றொரு அதிசயம்,

ரயில்வண்டிகள் நிர்ப்பயமாய் ஓடவும், அபாயமில்லாமல் தப்பித்துக்கொள்ளவும் புதிதாக அபாய அறிவிப்புயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதை ரயிலில் வைத்துக்கொண்டு தாராளமாய் எவ்வளவு வேகமாய் வேண்டுமானாலும் வண்டியை செலுத்தலாம். அதற்கு எதிரில் வெகுதூரத்தில் ஏற்படக்கூடிய தடைகளையும்அபாயங்களையும் அதுதானாகவே தெரிவித்துவிடுகின்றது. இதனால் எந்தக் காரணத்தைக்கொண்டும் ரயில் பிரயாணத்திற்கு இனிமேல் அபாயம் ஏற்படாதாம். இந்த யந்திரம் கண்டுபிடித்து 2500 இஞ்சின்களில் வைப்பதற்கு ஏற்பட்ட செலவு 3500000 முப்பத்தைந்து லக்ஷரூபாய் ஆயிருக்கின்றதாம். அதாவது ஒரு யந்திரம் 1500 ரூபாய்தான்விலை ஆகின்றது. மனிதனுக்கு 'தெய்வீக'த்தன்மைஏற்றுவதற்குப் பதிலாக ஐரோப்பியர்கள் யந்திரங்களுக்கு தெய்வீகத்தன்மை ஏற்றிவிடுகிறார்கள்.

நாகபட்டணம் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

நாகை தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு செப்டம்பர் மாதம் 3-வது வாரத்தில் நாகையில் உயர் திரு W. P. A. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். மகாநாட்டுக்குவரும் வெளியூர் பிரதிநிதிகளுக்கு தங்க இடவசதிகளெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மகாநாட்டிற்கென சுமார் 3000 பேர் உட்காரத்தக்க கொட்டகை பந்தல் ஒன்றும், அமைக்கத்தக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. மகாநாட்டு பந்தலில் திருவாரூர் சுயமரியாதை விளம்பர சபையாரால்'ஜெகதீசன்' 'தீண்டாமையின் கொடுமை' 'மனோன்மணி' என்னும் நாடகங்களும் நடத்தப்படும். மகாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகளுக்கு சௌகரியம் செய்து கொடுப்பதற்கு தொண்டர்படையொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தொண்டர்களாக சேரவிருப்பமுள்ளவர்கள் காரியதரிசியிடம் வந்து பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டியது. மகாநாட்டிற்கு தஞ்சை, திருச்சி, மதுரை முதலிய ஜில்லாக்களிலிருந்து பல நண்பர்கள் வருவதாக தெரிவித்திருக்கின்றார்கள். தேதிமுதலியன பின்னால் அறிவிக்கப்படும்

S. P. கிருஷ்ணன்,
T. P. ஆறுமுகம், காரியதரிசிகள்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கும். அவர்களை நம்பிக்கையடையும்படியாகச் செய்ய அவரால் சாத்தியப்படவில்லை. ஆகையால், அவருடைய தீர்மானத்தை அவர்கள் அங்கீகரித்து ஒத்துக்கொள்ளாவிட்டால் பட்டினிகிடந்து இறந்துவிடுவதாக உரைப்பதே அவருடைய அடுத்த உபாயமாகும். அவருக்கே பலாத்காரமென்பது உபயோகிக்கப்பட்டிருக்கின்றதென்கின்ற உண்மையை யறிந்தும் கூட அவருடைய பயமுறுத்தலான செய்கையானது குறைந்துவிட்டதாகக்காணப்படவில்லை. இரண்டாவதாக தற்கொலையென்பது பிராண சத்துருவான ஒரு பாவமென்றே நான் நினைக்கின்றேன். அவருடைய அத்தகைய பயமுறுத்தலை எனது இந்து நண்பர்கள் யாவரும் மிக்க சுலபமாகவே ஒருக்கால் அவர் உரைப்பதானது உண்மையாயிருக்கக்கூடுமோவென நம்பிவிட்டதை நோக்க எனக்கும் அவர்களுக்கும் அளவற்ற வித்தியாசமிருக்கின்றதென்கின்ற உண்மையை எனக்குப் புலப்படுத்திவிட்டது. (தொடரும்)

திருவிதாங்கூர் ஏல விவசாயிகள் கூட்டம்.

திருவிதாங்கூர் ஏலமே உலகினில் பெயர் பெற்றது. இக்காரணத்தாலேயே வாஸ்கோடிகா மாமுதலிய அயல்நாட்டு வர்த்தகர்கள் ஏராளமாக திருவிதாங்கூர் கடற்கரையைநாடி வரநேர்ந்தது. தமிழர்கள், அதாவது பெரியகுளம் வாசிகள் ஏலக்கிருஷி செய்ய முதன் முதலாக 19-வது நூற்றாண்டில்தான் ஆரம்பித்தார்கள். என்றாலும் அனுபோகமும் கட்டுப்பாடும் இல்லாத காரணத்தால் ஏல விவசாயிகள் அடைந்த பலவித துன்பங்களின் காரணமாய் "திருவிதாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்" என ஒரு சங்கம் தோன்றி, யாவரும் ஒற்றுமை யுடனிருந்து, அதிக இலாபம் அடைந்துவந்தார்கள். இச்சங்கத்திற்கனுசரணையாக "விற்பனைக்கமிட்டி" யென ஒரு கமிட்டியும் ஸ்தாபிதமானது. இக்கமிட்டியால் ஏதோ ஓர் வழியில் உதவிபெற நேர்ந்தபோதிலும், விற்பனை விஷயத்தில் பூர்ண உதவி அளிக்கமுடியவில்லை. இதற்குள், ஏல விவசாயிகளிடையே வேற்றுமையும், வீண் மனஸ்தாபமும், நம்பிக்கையின்மையும் வளர ஆரம்பித்தது. இக்காரணத்தால் ஏல விவசாயிகள் போதிய அபிவிருத்தியடையவில்லை யென்றே சொல்ல வேண்டியிருக்கின்றது.

ஆனால், ஏலச்சரக்கு விற்பனைக்கம்பேனி ரோ ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, பம்பாய், கல்கத்தா, கான்பூர், கராச்சி, அமிர்தசரஸ், டெல்லி முதலிய இடங்களில் கிளைகளுடனும், ஏஜண்டுகளுடனும் விர்த்தியடைந்து, விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை கட்டுப்பாடாக அதிக இலாபத்துடன் விற்றுவந்தார்கள். இக்கம்பெனியின் நிர்வாகத்திறமையைப்பற்றி, அனேகரால் புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றது. இதற்காக பாடுபட்ட திருவாளர்கள் இராமலிங்கம் செட்டியார், எஸ். பொன்னப்ப செட்டியார் இவர்களது முயற்சிகள் போற்றத்தக்கதாகும்.

ஏல விவசாயிகள் மேன்மேலும் ஒற்றுமையுடனிருந்து, விர்த்தியடையவேண்டி, போடிநாயக்கனூர் ஜமீன்தாரர் திரு. டி.வி.கே. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்களின் தலைமையில் போடிநாயக்கனூர் அரண்மனையில் ஏல விவசாயிகள் கூட்டம் ஒன்று 23-8-31ந் தேதி பகல் 11-மணிக்கு கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பல விஷயங்களும் விவாதிக்கப்பட்டு, கம்பெனியின் விதிகளைத் திருத்த வேண்டியிருந்தால், திருத்துவதற்காக, போடி நாயக்கனூர் ஜமீன்தாரரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான திரு. டி. வி. கே. காமராஜ பாண்டிய நாயக்கரவர்களைத் தலைவராகவும், ராவ்சாகிப் திரு. எ.எஸ். அழகண்ணன் செட்டியார் அவர்கள் உட்பட 12 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியானது நியமிக்கப்பட்டு 3-9-31ல் கூடும் கூட்டத்திற்கு ஷை கமிட்டியார் பை-லா திருத்தங்களைக்கொண்டு வரும்படி தீர்மானித்திருக்கின்றது.

பொதுக்கூட்டம்,

3-9-31ல் போடியில் பொதுக்கூட்டமொன்று கூடி, அக்கூட்டத்திற்கு கம்பம், கோம்பை, தேவாரம், போடி நாயக்கனூர் முதலிய ஊர்களைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து பிரதிநிதிகளை வரவழைத்து, ஷை பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு திருவிதாங்கூர் ஏல விவசாயிகள் அனைவரும் ஒப்புக்கொள்ளுவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கீழ்கண்ட விஷயங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு மேற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

1. ஏல விவசாயிகள் எல்லோரும் கம்பெனியில் பங்கெடுத்துக் கொள்ளுதல்.

2. கம்பெனியே கண்ட்ரோலராயிருத்தல்.

3. ஏலச்சரக்கை ஆக்ஷன் மூலம் விற்பனை செய்தல்.

4. ஆக்ஷனில் விற்பனையான சரக்குகளுக்கு கம்பெனியின் பங்குத் தொகையைக் கழித்துக் கொண்டு விற்ற விலைப்படி மீதியைப் பட்டுவாடா செய்தல்.

5. ஆக்ஷனில் விற்பனையாகாத சரக்குகளைக் கம்பெனி ஒப்புக்கொண்டு கம்பெனியின் பங்குத் தொகையைக் கழித்துக்கொண்டு கண்ட்ரோல் விலையில் மீதித்தொகையை பட்டுவாடா செய்தல்.

6. ஆக்ஷனை கோ-ஆப்-ரேடிவ் யூனியன் மூலம் அந்தந்த ஊர்களில் நடத்துதல்.

7. ஏல விவசாயிகள் அனைவரும் (12) பன்னிரண்டணா முத்திரைக் காகிதத்தில் கம்பெனிக்கு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தல்.

8. ஒப்பந்தங்கள் முடிந்தவுடன் ரிஜிஸ்டராரின் அனுமதி பெற்று எல்லோரும் விரும்புமிடத்தில் கம்பெனியின் தலைமை ஆபீசை வைத்துக்கொள்ளுதல்.

8. கமிஷன் விஷயத்தை மீட்டிங்கில் முடிவு செய்து கொள்ளுதல்.

10. நடைமுறைக்காக ஆரம்பத்தில் தலைவர்களின் கையெழுத்திட்டு விளம்பரம் ஒன்றை வெளியிடுதல்.

11. கம்பெனியின் தற்போதைய லாப நஷ்டத்தை நாளது வருஷம் ஐப்பசிமாதம் 30ம் தேதிக்குள் முடிவு கட்டி லாப நஷ்டம் ஏற்பட்டால் தற்போதுள்ள பங்குதாரர்களே லாபநஷ்டத்தை ஒப்புக்கொள்ளுதல் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

சென்று விடுவானேல், அவ்வேழு வருடம் முடிந்தவுடன் சட்டமானது அவன் இறந்துவிட்டான் என நிச்சயித்துவிடுகின்றது. அவன் உண்மையாகவே உயிரோடு எங்கேயாவது இருக்கலாம். அல்லது அவ்வேழுவருடம் கடந்தவுடன் தன் ஊருக்கே திரும்பிவரலாம். ஆனால் சட்டம் அதைப்பற்றிக்கவனிக்காது. ஏழு வருடம் அவன் இருப்பிடம் ஒருவர் செவியிலும் படாதிருந்தமேல் அவன் சட்டப்படிக்கு இறந்தேதான் ஆவான். ஆகவே அவன் சட்டப்படிக்கு இறந்து விட்டதால் அவன் தன் மனைவியை ஏழாவது வருடம் முடிந்ததிலிருந்து தன் சொந்த மனைவியாகப் பாவிக்க முடியாது. அவனுக்கு நீதி மன்றத்தாரும் அவன்லயின் தம்பதி வுரிமையை அளிக்கமாட்டார். ஆகவே அம்மனைவி உண்மையாக இல்லாவிடினும் சட்டத்தின்படிக்கு விதவையாகி விடுகின்றாள். நாம் மேலே கண்டபடி ஹிந்து விதவை மறுமணச் சட்டப்படிக்குச் செய்து கொள்ளலாம். ஆகவே உண்மையாகவே கணவன் உயிரோடிருப்பினும் ஒருமனைவி மறுவிவாகம் இப்போதிருக்கும் சட்டப்படிக்கே செய்துகொள்ளலாம். இச்சட்டத்திற்கு முன்னதாகவே மனுவும் நாரதரும் எட்டுவருடகாலமாகவும் கௌதமர் ஆறுவருடகாலமாகவும், வசிஷ்டர் ஐந்துவருடகாலமாகவும், ஒருகணவன் கேள்விப்படாதபடி போய்விட்டால் அவன் மனைவி மறுமுறை மணந்துகொள்ளலாம் எனவும், ஹிந்து சட்டமும் 12வருடம் கழிந்தபின் செய்துகொள்ளலாம் எனவும் விதித்திருந்தனர். இவைகளையெல்லாம் ஒழித்து நாம் மேலே கண்டபடி எவிடன்ஸ் ஆக்ட் ஏழுவருடமாக்கியது. ஆக இது மற்றொரு மறுமணச்சூழ்ச்சி. இதனால் இந்துமதம் போய்விட்டதா?"

ஆகவே நாம் இதுவரை கண்டுவந்தபடி எந்தச்சாத்திரத்தின் போரோலும் எந்தச்சட்டத்தின் போரோலும் விவாஹரத்தை மக்கள் ஆக்ஷேபிக்கின்றார்களோ அந்தச்சாத்திரமும் அந்தச்சட்டமும் விவாஹரத்தை யனுமதிக்கின்றன. ஆகவே சட்டமானது 'மதம்' என்பதின் உடலையும் உயிரையும் தின்றுகொண்டே வந்துவிட்டிருக்க அதன் வீண் நிழலைப்பற்றிக்கொண்டு உழலும் மாந்தரின் மடமை இருந்தவாறென்னே! இப்பொழுதுங்கூட 'பல இந்துக்கள் விரும்பினால் தம் விவாஹத்தை ரத்து செய்து கொள்ளலாம்' என்னும் நிலைமையில் இருந்து வருவதை நாம் ஒப்புக்கொள்ளுவதன்னியில் அதை அங்கீகரித்தும் நேரானதொரு சட்டம் ஏற்படுத்திவிட வேண்டியது நம் கடமையாகும். சுற்றுவழியிற் சென்று பெறும் விவாஹரத்தை நேரான வழியில் நம்மக்கள் அடையும்படி செய்தல் நமது கடமை, அதையேதான் நாம் மேலே கண்டபடி சாத்திரம் சட்டம் இரண்டும் நமக்கு வலியுறுத்துகின்றன.

(தொடரும்)

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

காப்பி 1-க்கு 0—8—0

டஜன் 1-க்கு 6—0—0

ஒருகாப்பி வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 12 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ,
4வெ கோர்ட் வீதி, ஈரோடு.

பெண் தேவை.

கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் மாதம் 65-ரூபாய் சம்பாதிப்பவரும், நாயுடு வகுப்பைச்சேர்ந்தவரும், கலியாணமாகாதவரும் 25 வயதுடையவருமான ஒரு வாலிபருக்கு, நல்ல கல்வியறிவும், அழகும், சொல்ப ஆஸ்தியும் உடைய ஒருபெண் தேவை. பெண் 20-வயதும் அதற்குட்பட்டவாயும் இருக்கவேண்டும். எக்குலமாயினும் விதவையாயினும் சம்மதமே. கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்.

திருமணம் 'சுயமரியாதை' முறையில் நடைபெறும்.

K. P.
C/o குடி அரசு

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பெண்களுக்குத் தான் விவாகங்கள் செய்கின்றார்கள். குருவிற்கு ஒரு பாரமார்த்தீகமும் சிஷ்யர்களுக்கொருபார மார்த்தீகமும் இருக்க முடியாது. இருந்தால் அதில் ஒன்று தான் சரியானதாகவிருக்க முடியும். குருவின் சனாதன தருமத்தை விட சிஷியர்களின் சனாதன தருமம் பழைய தருமமென்று சொல்லமுடியாது. குருவின் ஜாதியான நம்பூதரிப்பாரப்பார ஜாதிதான் எல்லா பார்ப்பார ஜாதியைவிட நடை முறையில் உயர்ந்த ஜாதியாகவிருக்கிறது. இவர்களுக்கு பிரஷ்டு கற்பித்தவர்களில்லை. குருவின் ஜாதியெல்லாம் நரகத்திற்குப் போவதாகச்சிஷியர்கள் சொல்ல முடியுமா?

அதுவுமல்லாமல் "ருதுமதி விவாகம் பாரமார்த்தீகத்திற்கு விரோதமானது. சனாதன தருமத்திற்கு விரோதம்" என்று சாரதா சட்டத்தை நீக்க வந்திருக்கும் திரு. கிருஷ்ணமாச்சாரியார் வைணவ மதத்தைச்சார்ந்தவர். இவருடைய தெய்வ குருவான இராமர், கிருஷ்ணர் இவர்களை க்ஷத்திரியர்கள் என்பதாக நீக்கிவிட்டாலும் ஆழ்வாராதிகளை பல ஜாதி யென்று தள்ளிவிட்டாலும் பிர்மஸ்ரீ ராமானுஜாச்சாரியை பிராமணர் அல்லவென்றும் குருவல்லவென்றும் சொல்லமுடியுமா? இவருடைய பிரதான சிஷியரும் பிர்ம சூத்திரப்பாஷியமெழுதினவருமான கூரத்தாழ்வாரை ஆச்சாரியல்லவென்று சொல்லிவிட முடியுமா? சனாதன தருமம் இவருக்குத் தெரியாதா? வேதம்படித்ததில்லையா? பாரமார்த்தீகத்தை யடைந்ததில்லையா? பகவான் பிரசாதன மளித்துப் பக்கத்தில் அழைத்து இருத்திக்கொண்டதில்லையா? இவர் ருதுவான பெண்ணை விவாகம் செய்து கொண்டது திரு. கிருஷ்ணமாச்சாரிக்குத்தெரியாதா? இவருடைய லௌகீக வாழ்க்கையைப் பிரபலப்படுத்த உகளந்த எம்பெருமான் ரெங்கனாதப் பிரபு தன் கையால் பிரசாதம் கொடுத்து பட்டர் என்னும் பண்டிதனைப் பிள்ளையாகக் கூரத்தாழ்வார் பெற்றது பொய்யா? அந்தப்பட்டர் பண்டிதத்திறமையைக் கொண்டாடாத வைணவர்களுண்டோ? அவரை யார் தான் பிராமணர்களல்லவென்று சொன்னார்கள்? இவர்களை யெல்லாம் தள்ளிவிட்டால் வைணவ சனாதன தருமம் எங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும்? இவர்கள் சனாதன தருமத்தை ஆலோசித்துப்பார்த்தவர்களல்லரவா? இவர்கள் சாஸ்திரக்ஞர்களல்லவோ? இவர்களைவிட கிருஷ்ணமாச்சாரி எந்த சாஸ்திர புத்தகத்தால் சாரதா சட்டத்தைத்தடுக்க சனாதன தருமத்தைத்தரித்துத்திரிந்தவரென்று அவர் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்த பிராமண சபை சொல்லுகிறது.

"அவர்களெல்லாம் பிராமண உத்தமர்கள் ரிஷிகள் அவதார புருஷர்கள். அவர்கள் எப்படியும் செய்து கொள்ளலாம். நாம் செய்து வந்த பாலிய விவாகமே செய்யவேண்டும். நமது வழக்கமும் அதுவாகும். பிராமண விவாகத்திற்கு பாராசஸ்மிருதியே பிரமாணம்" என்று சொல்லுவாரானால் பிராமணனுக்கு பாராசஸ்மிருதியால் விதித்த விதியில் எல்லாம் தள்ளப்பட்டு விட்டதே. அவர்கள் எப்படியிருக்கலாம் என்பதை ஒத்துக்கொள்ளுவோம். நாம் தான் ருதுவான பெண்களை விவாகம் செய்து கொண்டு தேகதாருட்டியமும் மனோ திடமுமுள்ள பிரஜைகளை உத்பத்தி செய்து கொண்டு அன்னிய மதஸ்தர்களுடைய ராஜாங்கத்தார்களுடைய தடிக்கப்பயப்படாமலிருக்க வேண்டியவர்கள்.

ஆசார விஷயமாகவும் லௌதிக விஷயமாகவும் சீதோஷ்ண விஷயமாகவும் நம்மைச் சூழ்ந்திருக்கிறவைகளும், நம் தத்துவ சாஸ்திரம், ஒழுக்கம், உயர்வான நோக்கங்கள், தொழில்கள், எண்ணங்கள், தேகக்கட்டு, ஆகாரம், நியமம், உடை முதலியவைகளெல்லாம் சனாதன தரும மென்கிற முன் வேதத்தின் ஜாதியார் என்று சொல்ல முடியாமல் பிரத்தியேகமான ஜாதியாராகச் சொல்லக்கூடிய தெகுதூரம் மாறி விட்டன. சனாதன தருமத்திற்கு பின்னம் வந்து விடுமென்று சட்டசபைக்கு சாரதா சட்டத்தை எதிர்க்கப்போகும் திரு. கிருஷ்ணமாச்சாரியாரும் அவரைச்சேர்ந்த பிராமண சபையாரும் சனாதன தரும ஜாதியைச் சேர்ந்தவர்களென்பதற்கு அவர்களிடம் பழைய வேத அடையாளங்களொன்றுமேயில்லை. ஆசாரியார்களுடைய நடை, உடை, ஆகாரம், படிப்பு, எண்ணம், தொழில் முதலியவைகள் சனாதன தருமத்திலில்லாதது போலவே அவர் தினமும் அணியும் திருநாமங்கூட அந்த வேதத்திலில்லை.

ராஜாங்கம் மதத்தில் பிரவேசிக்கப்படாதென்பது நியாயமற்றதாகும். எந்த ராஜாங்கமாகவிருந்தாலும் நியாயமில்லாத சட்டத்தைத் திருத்த வேண்டியதே அதன்கடமை. ஆங்கில ராஜாங்கமானது உடன்கட்டை ஏறுவதைத் தடுத்தது என்பது மட்டுமல்ல. ஒருவன் இறக்கும் தருணத்தில் இருக்கும்போது கங்கைக்குக் கொண்டு போய் அரி என்று சொல்லு அரி என்று சொல்லு என்று சொல்லி கங்கையில் குளிப்பாட்டுவார்கள். அதிலே அவன் சாகவேண்டும். இல்லையேல் கங்கைக்கரையில் போட்டுவிட்டு வந்து விடுவார்கள். அங்கே கிடந்து அவன் சாகவேண்டும். இதுவும் சனாதனதருமம்தான். இக்கொடுஞ் செயலை 1831 வருடத்தில் சட்ட மூலமாக ராஜாங்கம் நிறுத்தியது. க்ஷத்திரியர்களுக்குப் பெண் அதிகம் பிறந்தால் அவளுக்கு வாய்க்கும் புருஷன் தன் குலத்திற்கு ஏதேனும் வழியில் குறைந்த அந்தஸ்துள்ளவனாக இருந்தால் என்ன செய்வதென் குழந்தை பிறக்கும் போதே பெண்ணாயிருந்தால் கொன்று விடுவார்கள். இவ்வனியாயத்தை 1870ம் வருடத்தில் சட்டமூலமாக நிறுத்தப்பட்டது. இதற்கு புத்ரீவதமென்று பெயர். இந்த வதத்தின் பிராயச்சித்தத்திற்கு பிராமணர்களுக்கு தெக்ஷணையுமுண்டாம். எவனேனும் வெளியூரான் கிடைத்தால் அல்லது உள்ளூர் ஏழை இவர்களைப் பிடித்து யாகத்தில் பசுவாக்கி யூபத்தில் கட்டி கொலை செய்வார்கள். இந்த யாகத்திற்கு ரிக் வேதத்திலுள்ள "சுனச்சேப சூக்தம்" இதற்குப்பிரமாணமாகக்காட்டுவார்கள். இவ்வக்கிரமக் கொலையை 1845ம் வருட 21வது ஆக்டுப்படி நிறுத்தி விட்டார்கள். எல்லாத்தெய்வங்களும் கங்கையில் வாசம் செய்கிறதென்கிற புராணப்படி தெய்வ பிரார்த்தனைக்கு குழந்தைகளை கங்கையில் எறிந்து வந்தார்கள். இந்த இரக்கமற்ற செய்கையை 1835ம் வருஷத்திய சட்டத்தினால் நிறுத்தினார்கள். பிருகுபதனமென்னும் பிரார்த்தனையை உத்தேசித்து மலைமேலேறி விழுவதையும் நிறுத்தினார்கள். நீரிலோ நெருப்பிலோவிருந்து உயிரை விடுவதே மோக்ஷமென்று நினைத்து வந்த மகாப்ரஸ்தானம் என்பதையும் சட்டத்தால் ஒழித்தார்கள். ரதத்தின் அடியில் படுத்து உயிரை விடுவதே தேவ உலகத்தை அடையு மார்க்கமென்னும் ரதயாத்திரையையும் சட்டம் தடுத்து விட்டது. இதைப்போல அனியாயங்கள் பல ஆங்கில அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டன. அவைகளை யெல்லாம்விட மிகக்கொடுமையான பாலிய விவாகத்தைச்சட்டத்தால் தடுத்தால் சனாதனதருமத்திற்கு யாதொரு ஆபத்துமில்லை. அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டவைகளை விபரமாக மதவிசாரணை என்னும் புஸ்தகத்தில் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களால் ஆதாரத்துடன் எழுதப்பட்டிருக்கிறது. அதிலிருந்து சிலதை மட்டும் இதில் குறித்தேன். அதை வாங்கிப்படித்தீர்களானால் சனாதன தருமம் விளங்கும்.

அயர்லாண்ட் ஆஸ்பத்திரி குதிரைப்பந்தய லாட்டரி

மான்சேஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப் (நவம்பர் 28—1931)

1-வது பிரைஸ் 30000-பவுன்கள் 2-வது பிரைஸ் 15000-பவுன்கள், 3-வது பிரைஸ் 10000-பவுன்கள் வேறு 200 பிரைஸ்களுமுண்டு. டிக்கட் 1-க்கு ரூ. 7—8—0 டிக்கட்டுக்கு முன்பணத்துடன் முந்துங்கள்!

டிக்கட் கிடைக்குமிடம்:—

எஸ். கே. வரதராஜலு, ஏஜண்ட், திருச்செங்கோடு S.I.

வைத்திய பாஸ்கர பண்டித S. S. ஆனந்தரின்

மகா

சந்தனாதித்தைலம்

(24 வருடங்களாக உலகத்தில் பிரசித்தி பெற்றது)

இத்தைலம் மூளை பலவீனத்தையும் நரம்புத்தளர்ச்சியையும் மிக விரைவில் நீக்கி புதிய சக்தியைத் தரவல்லது. கண்களுக்கு ஒளியையும், குளிர்ச்சியையும் அளிப்பதில் நிகரற்றது. ஞாபகசக்தியை அதிகப்படுத்துவதில் ஒப்புயர்வற்றது. இன்றே ஒரு புட்டி வாங்கி உபயோகித்துப்பயனடையுங்கள். வீணே போலித் தைலங்களுக்கு காசை யிரையாதீர்கள்.

6 அவுன்சு ரூ. 1-0-0. 12 அவுன்சு ரூ. 1-14-0.

நரம்புத்தளர்ச்சியால் ஏற்பட்ட தலைநோயை குணப்படுத்தியது.

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் செய்யப்பட்ட மருந்துகளை சிலகாலமாக என்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மிக்க அனுகூலத்துடன் உபயோகித்து வந்திருக்கிறேன். என் மகளுக்கு நரம்புத்தளர்ச்சியினால் ஏற்பட்ட தலைநோயை அவருடைய மகா சந்தனாதித் தைலம் குணப்படுத்தியது........"

திவான்பகதூர் பி. கேசவப்பிள்ளை,

சி. ஐ. இ. எம. எல். சி.

இனும்.

விலாசம் தெரிவிப்போருக்கு சுகவழி என்ற புத்தகமும் கேட்லாக்கும் இனும்.

தந்திவிலாசம்:— 'மருத்துவன்' சென்னை. டெலிபோன் நெ. 2584

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலேக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு. ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—0
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
௸ 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
*குறள்	...	0—8—0
* இயற்கைமதம்	...	0—8—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள்	...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	...	0—6—0
* மாதர் சுதந்திரம்.	...	0--10--0
* ஆராய்ச்சி அணிகலம்		0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி. கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

நிறைந்த செய்தி! குறைந்த சந்தா!

ஆணித்தரமான அபிப்பிராயம்! அச்சமற்ற கண்டனம்!

இன்றே சந்தாதாராகுங்கள்.

சந்தா விபரம்.

உள் நாடு.

வருடம் ஒன்றுக்கு	...	ரூ.	13—8—0
மாதம் ஒன்றுக்கு	...	ரூ.	1—2—0
தனிப்பிரதி ...	...	ரூ.	0—0—6

வெளி நாடு.

வருடம் ஒன்றுக்கு	...	ரூ.	18—0—0
ஆறுமாதம்	...	ரூ.	10—0—0

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

மானேஜர்

'சண்டமாருதம்'

திருச்சினாப்பள்ளி

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய, வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆன், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முரிந்த சீழ்) வெளிபாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத் தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிரந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினாலோ, தளர்ச்செய்துக் கொண்டதினாலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்துகட்டு என்பதற்கும் தொடையின் இரத்த நரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,

(கால்ராபைரி)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.
Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.
India Novel depot
73, Serangoon Road.
கோலாலம்பூர்.
The Selanger Stamp Co.,
Market Street
S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S
The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.
"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

குடி அரசு கிடைக்குமிடம்.
திருப்பூர்.
ஆர். கருப்புசாமி,
பல்லடம் ரோடு.
சாத்தூர்.
எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சொ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

பண்டிதா. உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 10. (பத்து)
கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அறியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயம் அனையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு " 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

பஞ்சமா பாதகங்கள்

எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தக் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா? இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:— கோனவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

சுயமரியாதைத் தலைவர்களின்

போட்டோ பேட்ஜ்கள்.

உயர்ந்த வேலைப்பாட்டுடன் குறைந்த விலையில் 1 1/4" ரவுண்டு சைஸ் (வெள்ளைக்கலரில்) போட்டோ பேட்ஜ்கள் தயாராகி விட்டது. மாதிரிக்கு தேவையுள்ளோர் ஒன்றுக்கு 0.2-6 அணா ஸ்டாம்புமட்டும் அனுப்பவும். வியாபாரத்திற்கு தேவையுள்ளவர்கள் விலை விபரத்திற்கு எழுதவும்.

அ.ப. அர்த்தனாரி & பிரதர்
ஜலகண்டபுரம், (Via) ஓமலூர்.

பெண்கள் தேவை.

விதவை, ஏழை, யாவரும், எக்குலத்திலும் தெரிவிக்கலாம்.

A. C/o
குடி அரசு, ஈரோடு.

"குடி அரசு" ஏஜண்டுகள்.

N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட், முசிறி.
*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.
*காஸ்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.
*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.
*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாச்சிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.
T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசதெரு, காஞ்சீபுரம்.
A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வாராய முதலி தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை.
A. R. M. சந்திர பாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.
*B. தங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.
ஹாஜிமுகமது ஷேக்உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.
*M. ரத்னம்,
கிரோசினுயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டுத் திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.